384

REGISTERED No. M. 6165.                அணா. 2

# பத்ஹுல் இஸ்லாம்

# فتح الإسلام

FATHE-HUL-ISLAM

மாத பத்திரிகை

## மே 1953.


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| நோன்பின் மகிமை | (மாஸ்டர் கமல் பாபு) | 1 |
| பாஷோவின் மர்மம் | (தொடர் கதை) ... | 13 |
| தெய்வீகக் காதல்—(தொடர் கதை) (மாஸ்டர் கமல் பாபு) | ... ... | 24 |
| முட்டை வட்லப்பம் | (மாதர் பகுதி) ... | 30 |
| சிகடத் துண்டுகள் | ... ... | 31 |


பத்ஹுல் இஸ்லாம் ஆபீஸ் :
..., 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

N53.
187020

# பத்ஹுல் இஸ்லாம்.


சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனில்

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1-8-0 |
| தனிப் பிரதி | அணா. | 2 |
| மற்ற வெளி நாடுகளில் வருஷ சந்தா | ரூ. | 2-0-0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.



புதிய இரண்டாம் பதிப்பு

**நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரம்**

(சீருவசனம்)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவதரித்தது முதல், வபாத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூ. 8

அறபுத் தமிழ் அஷ்ஷைஜரதுல் முஹம்மதியா (றஸூலுல்லாவின் சரிதை) விலை ரூ. 8

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.



1 MAY 1953



பத்ஹுல் இஸ்லாம்

மே—1953.


# நோன்பின் மகிமை.

(மாஸ்டர் கமல் பாபு)

நன் அன்போடு ஒரே நாயனை வணங்கி நல்தனம் பெற நமக்கு நேர்வழி காட்டுவதற் கென்று வந்த நம் திருதூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அவதரித்து சீரும் சிறப்பும் அல்லாவின் அருளும் பெற்று அழியா புகழுடன் விளங்கிவரும் அந்த புனிதமான அரப் தேசத்தில், மார்க்க சட்டத்தை மீறாத முஜம்மில் என்ற மங்கையும், நடத்தையில் நாயனுக்கு நேர் விரோதமாக நடக்கும் முதஸ்ஸிர் என்ற வாலிபனும், நீயும் தண்ணீரும்போல் காதலர்களாக இருந்தார்கள். முதஸ்ஸிர் மீதுள்ள மோகத்தால் அனுதினமும் அவனுக்கு முஜம்மில் அன்போடும் ஆசையோடும் உபதேசம் செய்து வந்தாள். இவளிடம் பேசும்போது முதஸ்ஸிர் அப்படியே திருந்திவிடுவதாக சொல்வான். இவளைவிட்டு பிரிந்ததும் இவள் உபதேசங்கள் யாவும் அவனைவிட்டு பிரிந்துவிடும். முஜம்மிலுக்கு முதஸ்ஸிருடைய மூர்க்க செயலில்தான் வெறுப்பு தட்டியதே தவிர அவனுடைய கட்டு மஸ்தான திரேகத்தின் மீதும் அழகிய முகத்தின் மீதும் அவளுக்கு ஆசை வரத்தான் செய்தது.

மாலை மயங்கும் நேரம், ஆதவன் தான் அதிசீக்கிரத்தில் மறைவதற்கு அத்தாட்சியாக தன் வெள்ளிக் கிரணங்களை பொன்னிற மாக்கிக் கொண்டிருந்தான். முஜம்மில் ஒரு கஜூர் மரத்தில் சாய்ந்தபடி எதோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

“என்ன முஜம்மில், இந்த மணலிலேயே மாணிக்க கோட்டையை கட்ட திட்ட மிடுகிறாயா?” அங்கு வந்த முதஸ்ஸிர் அவள் பக்கத்தில் உட்கார்ந்தபடி கேட்டான்.

திடுக்கிட்டு தன் சிந்தனையை கலைத்து முதஸ்ஸிரை ஒருமுறை ஏற இறங்க பார்த்துவிட்டு முஜம்மில் சொன்னாள்;

“கொஞ்சம் தொலைவாக உட்கார் முதஸ்ஸிர்”

"ஏன்? முஜம்மில், என்னை உனக்கு பிடிக்க வில்லையா?"

"நான் அப்படி சொல்ல வில்லையே"

"பக்கத்தில் உட்காருவது பாவமா?"

"அதில் புண்ணியம்தான் என்னயிருக்கு?"

"முஜம்மில், இன்று உன் பேச்சே ஒரு மாதிரியாக இருக் கிறதே"

"முதஸ்ஸிர்! நீ என்ன பால் குடிக்கும் பாலகனா? பருவ மடைந்த பெண்ணாகிய நான் உன் பக்கத்தில் உட்காரலாமா?"

"அப்படியானால் நீ என்மீது கொண்டிருந்த காதலும், கல் யாண வாக்குறுதியும் இன்று கண்ணுக் கெட்டாதூரம் காற்றில் பறந்து போய்விட்டதா?"

"கருத்தில் பதிந்த காதல் கல்லு எந்த புயல் காற்றிலும் பறக் காது முதஸ்ஸிர், ஆனால் காதலனுடைய கொடூர செயலின் செம் மட்டியால் சிதறிவிடும்"

"நான் உனக்கு என்ன கொடுமை செய்தேன் முஜம்மில்"

"எனக்கு எவ்வளவு கொடுமைகள் செய்தாலும் சந்தோஷ முடன் ஏற்றுக் கொள்வேனே"

"பின்னே யாருக்கு நான் கொடுமை செய்கிறேன் என்கிறாய்?"

"சன்மார்க்கத்திற்கு"

"நான் ஒன்றும் செய்யவில்லையே!"

"முதஸ்ஸிர்! தன் தவறு தனக்கு தெரியாது, நான் அதிகாரத் தோடு கேட்கவில்லை. அன்புடன் சொல்கிறேன். நீ ஒரு முஸ்லிமாக பிறந்து மார்க்கச் சட்டத்தில் விலக்கப்பட்ட மதுவை அருந்தலாமா? வட்டி வாங்குவதும் கொடுப்பதும் அல்லா இடமும் அவனு டைய சகல அன்புக்கும் பாத்திரமாயும் நமக்கு ரட்சகருமாகிய ரஸூலுல்லா இடமும் போர்தொடுத்தது போலாகுமென்று திட்ட வட்டமாக திருகுர்ஆனில் சட்டம் இருப்பதை அப்பட்டமாக அறிந் தும் அதை மட்டமாக நினைத்து தட்டலாமா? மூன்று வெள்ளிக் கிழமை தொடர்ந்து ஒருவன் தொழுகாவிட்டால், அவன் முஸ்லி மில்லை என்று முஹம்மத் நபி சொன்னதை அறிந்த நீ தொழு கிறாயா? நரகலோகத்தில் உள்ள விஷஜந்துக்களை பற்றி நாயகம் அவர்கள் நேரில் பார்த்து அவைகள் கொடுக்கும் கஷ்டத்தை எவ் வளவு விரிவாக சொல்லி இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் அறிந்த நீ நான்கு [illegible] ருமைக்காக நாயனை மறந்து ரஸூலை யும் மறந்து சன்மார்க்கத்திற்கு சதிகள் செய்து நரகலோகத்தில்

187020



நாய்போல் கதறவேண்டு மென்ற ஆசையா? எத்தனை நாட்கள் வாழ்ந்தாலும் ஒரு நாள் மரணமாக வேண்டுமென்பதை மறந்தாயா? முதஸ்ஸிர்! நிதானித்து நினைத்துப்பார். நம் நபியை படைக்கா விட்டால் இந்த நானிலத்தையும் படைத்திருக்கமாட்டேன் என்று நாயன் சொன்ன அந்த நபிக்கு எந்த பொருள் தான் இல்லாமல் இருந்தது. எந்த விரலின் அசைவால் விண்ணுலகத்தின் சந்திரன் இரண்டு துண்டுகளானதோ, அதே விரலை ஒரு மலையை நோக்கி அசைத்திருந்தாலும் அவருக்காக கல்மண் நிறைந்த அம்மலையும் தங்கக்கட்டிகளாகி அவர்கள் காலடியில் வந்து குவிந்திருக்குமே. அவ்வளவு சக்தி வாய்ந்த சர்வலோகத்திற்கும் சக்கரவர்த்தியான நபி, ஏன் சிறுமையே என் சிநேகிதன் என்று சொன்னார்கள்? மண் ணுலகத்தின் ஆசை அவர்கள் மனதில் எள்ளளவாகிலு மிருந்ததா? பூலோகத்தின் ஆசையால் புர்கானை புறக்கணித்து பாவைகளின் மோகத்தால் மார்க்கத்தையும் மறந்து பணத்தின் பாசத்தால் அல்லா ரஸூலிடமும் போர்தொடுக்க தயங்காத நீ, முஹம்மத் நபியின் உம் மத்தில் பிறந்த நீ முஸ்லிமென்று சொல்ல உனக்கு வெட்கமில்லையா? தூங்குகிறவனை எழுப்பினாலும் முழித்துக் கொண்டிருப்பவனை எழுப்ப முடியாதென்பது போல் மார்க்க சட்டத்தை அறியாத மூடர்களாக இருந்தால் உபதேசங்களை கேட்டு முடியும்வரை முயற் சித்து அதன்படி நடப்பார்கள். ஆனால் நீயோ, சன்மார்க்கத்தி லுள்ள சர்வசரித்திர சாஸ்திரங்களை அறிந்த சதிகாரன். உனக்கு சொல்ல வேண்டிய அவசியமென்ன? எல்லாம் அறிந்த உன்னை திருந்த செய்வது பூனையை புலியாக்குவதுபோல் தான். தொழு காதவன் கையில் தண்ணீர் வாங்கிகுடிக்கவும், வட்டிவாங்குபவன் வீட்டில் உணவு உண்ணவும், உத்தம நபி தடை செய்திருக்கும் போது மூர்க்கருளத்திலே மூழ்கி கிடக்கும் உன்னை நான் எப்படி மணந்துக்கொள்ள முடியும்? உன்னை களங்கமின்றி தூயமன தோடு காதலித்தது உண்மை, ஏன்? இப்பவும் உண்மையாக உன்னை காதலிக்கிறேன். என்கிலும் என் ஆவி எவன் வசத்தில் இருக்கிறதோ அந்த அன்பே உருவான அல்லாவின் மீது ஆணை யிட்டு சொல்கிறேன். நீ வட்டி தொழிலை விடாமலும் ஆண்ட வனை வணங்காமலும் தூர்நடத்தையே நேசித்து வருவதானால், உன்மீதுள்ள ஆசையால் நான் அயலார் மீதுபாசம் கொள்ளா விட்டாலும், கன்னி பெண்ணாகவே காலம் கடத்துவேனே யழிய உன்னை மட்டும் கனவிலும் கல்யாணம் செய்துக் கொண்டு நாச மாக மாட்டேன். இது என் மாற்ற முடியாத மனதின் தீர்ப்பு." முஜம்மில், தன் தகர்க்கமுடியாத தீர்மானத்தை தயக்கமின்றி தீப் பொறிக்க தெரிவித்து விட்டு திரும்பி பார்க்காமல் தன் இல்லத் திற்கு சென்று விட்டாள்.

முதஸ்ஸிர் மூச்சற்ற மனிதன்போல் அம்மணலிலே உட்கார்ந்திருந்தான். அவன் மனதை ஏதோ ஒரு இனம் தெரியாத சாட்டியால் தாக்குவதுபோலிருந்தது. அந்த சாட்டிமுன் அடி தாங்காமல் அவன் மனமே அவனுக்கு உபதேசம் செய்ய தொடங்கியது.

"முதஸ்ஸிர்! முஜம்மிலுடைய தீர்மானத்தை கேட்டாயா? கேவலம் காதலித்த கன்னி பெண்ணே உன்னை காலால் தட்டிவிட்டுபோகும்போது நாயனுடைய ஆதாரிய நபிமட்டும் உன்னை நரகலோகத்திலிருந்து மீட்டி ரட்சிப்பாரா? ரிஜ்கை கொடுக்கக்கூடிய ரஜ்ஜாக் நான் இருக்கிறேனென்று ஆண்டவன் திருக்குர்ஆனில் சொல்லியிருப்பதை அறிந்தும் எதிர்காலத்தை எண்ணி ஏன் வட்டி வாங்கவேண்டும்? மறுநாளின் கவலைகொண்டு மாணிக்கங்களாக சேர்த்து வைத்தபின் அன்றிரவே நீ மரணமாகிவிட்டால் ஆண்டவனிடம் போட்டியிட்டு அபகரித்த அந்த பொன்காசு யாருக்கு உதவும்? அதை அடைவதற்காக ஆண்டவனிடம் நீ செய்த சண்டைக்காக என்ன சன்மானம் கிடைக்கும்? எந்தநாட்டில் முஹம்மத் பிறந்து மூட காபிர்கள் மனதில் எல்லாம் மங்காத இயற்கை மதமென்னும் இஸ்லாம் மார்க்கத்தின் தீபங்களை ஜெகஜோதியாக பிரகாசிக்க செய்தாரோ அதே நாட்டில் பிறந்து முஸ்லிமென்று மார்தட்டும் நீ உன் மனதிலுள்ள தீபத்தையும் தீயச்செயலின் தண்ணீரால் அழிக்கலாமா? மனிதனுக்கு மனம்தான் காரணம். சென்றதை மறந்துவிடு. செய்த பாபத்திற்காக ஆண்டவனிடம் மன்றாடி மன்னிப்புகேள். அடியார்களின் பாபத்தை பொறுத்து அருள் செய்யப்பட்டவன் ஆண்டவன் ஒருவன்தான். இன்னும் தாமதிக்காதே. பிறப்பிடும் சீக்கிரம் ஓடு. உனக்காக ஆண்டவன் தன் கிருபை என்னும் ரஹ்மத்தின் கதவு திறந்தே வைத்திருக்கிறான்" என்ற தன்மனதின் உபதேசத்தை உற்று கேட்ட முதஸ்ஸிர் அக்கணமே மஸ்ஜிதை நோக்கி புலிபோல் பாய்ந்தோடினான்.

ரமலான் மாதத்தின் முதல்நாள். தன் அழகிய இடுப்பை நீர் குடத்திற்கு வாகனமாக செய்து அன்ன நடையில்வந்துக்கொண்டிருந்தாள் முஜம்மில்.

"அஸ்ஸலாமு அலைக்கும் யாமுஜம்மில்" என்ற பழக்கமான குரலை கேட்டு திரும்பிபார்த்தான். ஆம் அவன் மனதை கொள்ளையிட்ட முதஸ்ஸிர்தான் ஸலாம் செய்தது. அவன் நெற்றியில் நீதி என்ற நட்சத்திரம் மின்னிக்கொண்டிருந்தது.

"வஅலைக்குமுஸ்ஸலாம் எங்கேபோய் வருகிறீர்கள்?" இடுப்பில் இருந்த குடத்தை கீழே இறக்கிகொண்டே கேட்டாள் முஜம்மில்.

"அஸர் தொழுதுக்கொண்டு வருகிறேன்" முதஸ்ஸிர் மகிழ்ச்சியுடன் சொன்னான்.



"ஸுப்ஹானல்லா, அப்படியானால் இன்று நோன்பும் வைத்திருப்பீர்கள் இல்லையா?"

"அல்ஹம்துலில்லா, அல்லாவின் கிருபையாலும் நபியின் பொருட்டாலும், உன் அன்பின் அனுகிரஹத்தாலும், என் அநியாய செயல்கள் யாவும் அழிந்து விட்டது" இதை சொல்லும்போது அவன் கண்களிலிருந்து அல்லாவின் ரஹ்மத் என்னும் ஆனந்த கண்ணீர் முத்துவடிவமாக முதஸ்ஸிரின் முகத்தில் உருண்டோடியது. இதை கேட்ட முஜம்மில் சந்தோஷம் தாளாமல் தன் மனதை கவர்ந்த மன்மதன் மார்பில் தன்தலை சாய்த்து கேட்டாள்.

"ஒரு மாதமாக காணவில்லையே எங்கேபோய் இருந்தீர்கள்?"

"வட்டிகளை எல்லாம் ஒழித்துவிட்டு வியாபாரம் செய்வதற்காக ஷாம் தேசம் சென்றிருந்தேன். அல்லாவின் கிருபையால் நான் எதிர்பார்த்ததிற்கு அதிகமாகவே லாபம் கிடைத்தது" அவளை அன்புடன் தழுவிகொண்டே சொன்னான்.

"இதற்காக நாயனுக்கு நன்றி செலுத்தினீர்களா?"

"அந்த நாயனிடம் சேர்ந்த நாயகியாகிய உனக்கல்லவா முதலில் நன்றி செலுத்தவேண்டும்" அவளை அணைத்துக்கொண்டு சொன்னான்.

"எப்பவும் உங்களுக்கு வேடிக்கைதானா?" செல்வ கோபத்தோடு அன்பின் அடையாளமாக தன் அழகிய கரத்தால், கற்கண்டின் சுவை தரும் அவன் கன்னத்தில் ஆசையுடன் அடித்துவிட்டு புள்ளிமான்போல் துள்ளிக்குதித்து கீழே இருந்த குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு நடையை கட்டினாள் முஜம்மில்.

சில நாட்களுக்கு பின் காதல் தோட்டம் செழித்து காதலர்கள் இருவர்முகமலர்களும் மலர்ந்து கல்யாண கயிறுடன் மணமலர்கள் இணைந்து காதலர்கள் இருவர் கழுத்திலும் பிணைந்து பூரித்தது. எவருக்கும் அடிமையின்றி யாரையும் எதிர்பாராமல் கனவேகத்தில் சென்று உங்களுக்கு மணமாகி மூன்றுஆண்டுகள் முடிவானதென்று முரசு கொட்டினான் காலக்காண்டிபன்.

இருக்க இடமிருந்தும், உண்ண உணவிருந்தும், அலங்கரிக்க ஆடைகள் இருந்தும், அதிகாரத்திற்கு ஆட்கள் இருந்தும், துயரமற்றிருக்க திரவியங்கள் இருந்தும், அவர்கள் இன்பவாழ்வில் இருள் அடைந்தே இருந்தது. எவ்வளவுதான் நட்சத்திரங்கள் கண் சிமிட்டி சிமிட்டி காட்டினாலும் சந்திரன் இல்லாத வானம் சுந்தரமாக இருக்குமா? அதேபோல் எவ்வளவுதான் குறைவில்லாமல் செல்வமும் சவுக்கியமும் குவிந்து கிடந்தாலும் குழந்தை இல்லா

குடி சோபிக்குமா? முதஸ்ஸிர் முஜம்மில் இருவரும் அளவுக்கு மீறிய தானதர்மங்கள் எல்லாம் செய்து ஒரு குழந்தைக்காக ஆண்டவனிடம் கண்ணீர் விட்டு கேட்டார்கள். எவ்வளவுதான் இபாதத் செய்து கெஞ்சி கேட்டும் அவர்கள் குறை தீரவில்லை. கடைசியாக முஜம்மிலுக்கு ஒரு யுக்தி தோன்றியது. நாயனுடைய ஸிப்தாகிய நோன்புவைத்தால் அப்போது கேட்கும் துவா அவசியம் ஆண்டவன் ஏற்றுக்கொள்வான் என்ற ஆசையோடு தன் நாயகனாகிய முதஸ்ஸிருக்கும் சொன்னாள். அவனும் அதை ஆர்வத்துடன் ஆமோதித்தபடியால் இருவரும் 'கஜாயே ஹாஜத்' என்னும் இருபத்தி ஒரு நாள் நோன்பு வைத்துக் கெஞ்சி கேட்டார்கள். ஆண்டவன் அன்பைநாடி ஆர்வத்தோடு வைத்த அந்த நோன்பின் பொருட்டால் மூன்றாவது நாள் நோன்பில் முஜம்மில் கர்ப்பவதியானாள். பகலென்ற பெரியவனுடன் இரவென்ற இளைஞன் போட்டி போட்டுக் கொண்டும் போர்புரிந்துக்கொண்டும் போனபடியால் மற்றவருடைய பயமின்றி மாதமென்ற மன்னன் பத்து நாடுகளை தன் வசமாக்கிக் கொண்டான். ஆகவே முதஸ்ஸிர், முஜம்மில் இருவர் மனதையும் சந்தோஷமாக்க மருத்துவச்சியும் அவர்கள் வீட்டுக்கு வந்து விட்டாள். அல்லாவின் ஸிப்தை கையாண்டபோது ஏற்பட்ட கர்ப்பமாகையால், நற்குணங்கள் பொருந்திய லட்சணத்தோடும், பௌர்ணமி நிலாவின் ஒளியில் உற்பத்திசெய்ததுபோல் அழகிய ஆண்மகன் அவதரித்தான். குழந்தையைக்கண்ட முதஸ்ஸிரும் முஜம்மிலும் அளவுக்குமீறிய ஆனந்தத்தால் அவர்கள் சுய உணர்வு அற்று மூர்ச்சையாகும் நிலைமையை அடைந்தார்கள்...

பரிசுத்தமான திரு குர்ஆனிற்கு யாசீன் ஸூராதான் இருதயமென்று தூதர் நபி வாக்கியம். ஆனபடியால், தங்கள் இருதய இருளை இருக்குமிடம் தெரியாமல் விரட்டி அடித்த அந்த சந்திர ஒளியுள்ள செல்வ குமாரனுக்கு 'யாசீன்' என்று நாமம் சூட்டினார்கள். கடிகாரம் முள் சுழன்று மணி காட்டுவது போல காலச்சக்கரம் சுழன்று குழந்தையின் வயது ஏழு என்று எடுத்துக் காட்டியது. இந்த அற்பமான ஏழு வயதில் யாசீன் மனதில் அநேக நற்குணங்கள் குடி புகுந்திருந்தன.

ஒருநாள் மண்ணுலக மனிதர்கள் யாவும் விண்ணுலகத்தையே நோக்குவதை பார்த்த யாஸீன், வியப்புடன் தன் தாயாரை அணுகி கேட்டான்:

“அம்மா! எல்லோரும் வானத்தையே பார்க்கிறார்களே ஏன்?”

“பிறை தெரிகிறதா என்று பார்க்கிறார்கள் கண்ணே” முஜம்மில் சொன்னாள்.



“இதற்கு முன்னும் எத்தனையோ பிறை தெரிந்ததே அதை எல்லாம் இப்படி உற்று பார்க்கவில்லையே அம்மா!”

“இது ரமலான்மாத பிறை, இதை பார்த்துத்தான் நோன்பு வைக்க வேண்டும். அதற்காகத்தான் எல்லோரும் அக்கரையுடன் பார்க்கிறார்கள்” முஜம்மில் இதை சொல்லும் போது மக்ரிபுக்கு பாங்கு சொன்னபடியால், யாசீன் வேறு எதையும் கேட்காமல் மஸ்ஜிதை நோக்கிபுறப்பட்டான். மக்ரிப்தொழுகைக்குப்பின் மௌலவி ஸாஹிப் ரமலான் மாதத்தின் சிறப்பையும், நோன்பின் மகிமையும் பற்றி வெகு அருமையாகவும் இனிமையாகவும் (பிரசங்கம்) வாஅழ் செய்தார்கள். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் யாசீன் மனதில் கல்லில் எழுதிய காவியம் போல் பதிந்துவிட்டது. எனவே வீட்டிற்கு வந்த யாசீன் நாளை தானும் நோன்பு வைப்பதாக பெற்றோரிடம் குதூகலத்துடன் கூறினான். முஜம்மில் முதஸ்ஸிர் இருவரும் வேண்டாமென்று தடுத்தார்கள். அதனால் அன்றிரவு அம்மா சஹருக்கு எழுப்பமாட்டாள் என்று அறிந்த அச்சிறுவன் தூங்கினால் எங்கே நோன்பு தவறிவிடுமோ என்ற பயத்தினால் தூங்காமல் திருகுர்ஆனை திலாவத் செய்துக் கொண்டிருந்தான். தாய் தந்தையர் தூங்கும்படி எவ்வளவு சொல்லியும் தூக்கம் வரவில்லையென்று தட்டிக் கொண்டே இருந்து பெற்றோர்கள் “சஹர்” செய்யும்போது அவனும் சஹர் செய்துவிட்டு அன்று நோன்பு வைத்துக் கொண்டான் யாசீன். காலை கதிரவன் உதயமாகி மேலே ஏற ஏற யாசினுடைய களங்கமில்லா கண்விழிகள் உள்ளே போய் கொண்டிருந்தன. பகல் மணி பனிரெண்டானதும் பேரின்ப பிள்ளையின் வாடிய முகத்தை பார்க்க சகிக்காதவளாய் முஜம்மில் அன்புடன் யாசினுக்கு சொன்னாள்:

“நம் குறைகளை தீர்க்கவந்த குல விளக்கே, உன் கண்களில் குழிவிழுந்து விட்டது. பிடிவாதம் செய்யாமல் ஒருபிடி சாதம் சாப்பிடடா என் சந்திர வடிவமே”

“அம்மா நோன்பின் மகிமை மட்டிலடங்காதது, நான் விடமாட்டேன் அம்மா” யாசீன் சொன்னான்.

“நம் வாழ்வின் வைடூரியமே! அல்லா உன்மீது நோன்பை பர்லாக்கவில்லையடா” முதஸ்ஸிர் மகனிடம் வாஞ்சையுடன் கெஞ்சினான்.

“அப்பா! பர்லாக்காத நோன்பை வைத்தால் பாபமா?” யாசீன் பணிவுடன் கேட்டான்.

“பாபமாகாது என் பீதாம்பர பாலகனே, உன் உடம்புதான் கெட்டுவிடும்” கண்கலங்கி முஜம்மில் சொன்னாள்.

"அம்மா! அழியக்கூடிய இந்த உடல் ஆண்டவனுக்கு நோன்பு வைத்து அழிந்ததென்றால் அதுவே என் பாக்கியமாகும்" முக மலர்ந்து மகிழ்ச்சியுடன் சொன்னான் யாசீன்.

"சாயந்திர வரையில் உன்னால் தாங்கமுடியாதடா என் சவுந்தரிய சிகாமணியே, உனக்காகவே சமையல் செய்திருக்கிறது. மறுக்காமல் சாப்பிடடா" என்று முதஸ்ஸிர் முத்த மிட்டு மன்றாடினான்.

"அப்பா! பிடித்த நோன்பை விடுவது பெரிய பாபம்........"

"அதற்காக நாளை மஹ்ஷரில் நான் வாதாடுகிறேனடா. மதியின் மங்காத மாணிக்கமே" முதஸ்ஸிரும் முஜம்மிலும் ஏக காலத்தில் உரத்த குரலில் சொன்னார்கள்.

"அம்மா! இந்த மாதம் திருகுர்ஆன் இறங்கி சிறப்பு வாய்ந்தது. இம்மாதத்தின் பறக்கத்தாலும் நோன்பின் பொருட்டாலும் எனக்கு பசியை அடக்கும் சக்தி பேரொளியாகிய அந்த 'அல்லா ஸுபுஹான ஹுவதஆலா' வே அன்புடன் அருள்புரிவான். நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள். இப்போது எனக்கு இந்த உலகமே வந்து உபதேசம் செய்தாலும் ஒன்றாக்கி இருக்கும் நோன்பை ஒருபோதும் உடைக்கமாட்டேன்" யாசீன் கடைசியாக சொல்லிவிட்டு லொஹர் தொழுகைக்காக ஓடிவிட்டான்.

அஸர் நேரமானதும் யாஸீனுடைய கண்கள் இரண்டிலும் இருள் படிந்தது. காதுகள் இரண்டும் கேட்கும் சக்தியை இழந்து விட்டன. கால்கள் இரண்டும் நடக்க மறுத்தது. மாசற்ற அம்மழலையின் மனதிலே ஏதோ ஒரு இன்ப இடி இடைவிடாமல் இடித்தது. மயக்கமுற்று கீழேவிழுந்த யாசீன் மூச்சு விடவும் மறந்து விட்டான். இல்லை மறுத்து விட்டான்.

முதஸ்ஸிர் முஜம்மில் மனவானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த சந்திரன் மரண மேகத்தில் மறைந்து விட்டது. தவம் கிடந்து பெற்ற தங்க தாம்பாரம் சவமாக தரையில் கிடக்கிறது. மாலையிட்டு மார்போடு அணைத்து மருமகளுடன் மணவாழ்க்கை நடத்துவதை மனம் குளிர்ந்து பார்க்க வேண்டுமென்று மனக்கோட்டை கட்டி மனப்பால் குடித்திருந்த மாதா பிதாக்களின் மனதில் துயர புயலை கிளப்பி விட்டு மரண மாதாவின் மடியிலே தவழ்ந்தான் மதியுள்ள மைந்தன். வாழ்வின் வாளுக்கு உறையாகவும் உடைந்த உள்ளத்தை ஒன்று சேர்க்கவந்த உத்தமபுத்திரன் என்று பெருமை கொண்டிருந்த பெற்றோர்களின் பாசத்தில் நாசமென்ற நஞ்சை கொட்டிவிட்டு நாயனிடம் அடைக்கலம் புகுந்தான் அந்த நானில புகழுக்குரிய நாதன். கல்யாணம் செய்துகொண்டு கண்குளிர பார்க்க வேண்டுமென்று கனவு கண்டிருந்த அன்னை தந்தையின்



கண்களை கலங்கசெய்து கண் மூடிக் கொண்டான் அந்த குறைகளை தீர்க்கவந்த குபேரன். கடவுளிடம் கண்ணீர்விட்டு கெஞ்சி கேட்டு கிடைத்த கற்கண்டு வாஞ்சையுடன் சொல்லிய கொஞ்சும் மொழிகளை கேளாமல் மிஞ்சிய மனதோடு அஞ்சா நெஞ்சமுடன் அன்னை தந்தையை வஞ்சித்து நஞ்சை உண்ணவன்போல் நாயனிடமே தஞ்சம் அடைந்தான் அந்த நற்குணங்கள் பொருந்திய நாயகன். நாயனுடைய ஸிப்தாகிய நோன்பு சுவர்க்கலோகத்தில் சேர்க்குமென்ற நம்பிக்கையில் இந்நானிலத்தையே மறந்தான் நவரத்திரமான அந்நரன். அல்லாவின் தீதாரைகாண வேண்டுமென்ற அளவில்லா ஆசையாலும், பகர்க்க முடியா பாசத்தாலும், வாரி அணைத்து வாஞ்சையுடன் முத்தமாரி பொழிந்த மாதா பிதாக்களையும் மறந்தான் அந்த மார்க்கபற்றுதலுள்ள மன்மதன். முதஸ்ஸிர் முஜம்மில் மனவீட்டில் மங்காத ஒளி வீசவைப்பதற்கு மாறாக வீசிய ஒளியையும் ஒளித்து விட்டான் அந்த மேலோக மலாயிக்களின் புகழுக்குரிய மழலை.

யாசீன் மரணத்தை முன்னிட்டு முதஸ்ஸிர் முஜம்மில் மனதில் எவ்வளவு எரிமலை கக்கியதென்று எடுத்துரைக்க முடியாது. சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், செல்வ செந்தாமரையான சிசுசென்ற இடத்திற்கே இருவரும் சென்றுவிட தயாராக இருந்தார்கள். ஆனால் தற்கொலை செய்து கொள்வது கொடிய பாபமென்று இஸ்லாம் மார்க்கம் வழி மறித்து நின்றதால், புயலில் சிக்கிய படகு போல் பரதவித்துக் கொண்டிருந்தார்கள். செல்வகுமாரனின் சவத்தை தகனம் செய்வதற்காக குளிப்பாட்டி சுத்தம் செய்ய முற்பட்டார்கள். துயரதீயினால் எரிந்துக் கொண்டிருக்கும் அவ்வீட்டில் பிச்சைகாரர் இருவர் வந்து அப்போது பிச்சைகேட்டார்கள். பிச்சையிடுவதற்காக முதஸ்ஸிர் வெளியே வந்தான். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல், மகனின் மரணதுயரம் அவன் முகத்தில் கவலை கோடுகளை கிழித்திருந்தன. சோகமே உருவாகி பிச்சையிடுவதை பார்த்த பிச்சைகாரர்களிலொருவர் முதஸ்ஸிரை பார்த்து சொன்னார்:

"அன்பரே! அல்லாவின் பெயரில் அளிக்கும் தர்மத்தை அகமகிழ்ந்து அளிக்க கூடாதா? கவலையுடன் தர்மம் கொடுக்க யார் கற்றுக்கொடுத்தது. இந்த பிரியமில்லா பிச்சையை நாம் பெறமாட்டோம். சந்தோஷமாக கொண்டுபோங்கள்"

"மேன்மை பொருந்திய முர்ஷித் அவர்களே, அல்லாவின் மீது சத்தியமாக சொல்கிறேன். உங்களுக்கு தர்மம் செய்வதால் ஏற்பட்ட துயரமில்லை எனக்கு, தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்" முதஸ்ஸிர் அன்புடன் வேண்டினான்.

(மே. 53.)

"அப்படியானால் தங்கள் துயரத்தின் காரணம் தெரிவிப்பீர்களா?" வேண்டுகோளுடன் கேட்டார் பிச்சைக்காரர்கள்.

"நாயனிடம் தவம்கிடந்து பெற்ற என் நிலவு ஒளியான ஒரே பிள்ளை இன்று நோன்புவைத்து இறைவனிடம் அடைக்கலம் புகுந்தான். அந்த அறிவுள்ள அழகியசிகாமணி அழிந்துவிட்டதால் இந்த ஆலமே நமக்கு இருளாக தென்படுகிறது" பேச்சு வெளி வாராதபடி துக்கம் முதஸ்ஸிரின் தொண்டையை அடைத்தது.

"அன்பரே, அந்த சவத்தை நமக்கும் சற்று காண்பிப்பீர்களா?" சாந்தமுடன் தாழ்மையோடு பிச்சைகாரர் கேட்டார்கள்.

"வந்து பாருங்கள்" என்று முதஸ்ஸிர் சொல்லிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான். பிச்சைகாரர் இருவரும் அவனைபின் தொடர்ந்தார்கள். சற்றுநேரம் சவத்தை பார்த்தபின் இருவரில் ஒரு பிச்சைகாரர் தன் கலிமாவிரலினால், உயிரற்றுகிடக்கும் உத்தம புத்திரனின் மார்மீது ஒரு தட்டுதட்டி சொன்னார். "அல்லாவின் உத்திரவை கொண்டு உடனே எழுந்திரு." இவ்வளவு தான் சொன்னார். என்ன ஆச்சரியம்! என்ன அதிசயம்! மூச்சற்று சவமாக கிடந்த செல்வ சிகாமணி, மேகத்தில் மறைந்த சந்திரன் மீண்டும் ஒளி வீசுவதுபோல், தூங்கி முழித்தவன் மாதிரி கண்களை கசக்கிக்கொண்டே எழுந்து முதஸ்ஸிர் முஜம்மில் மனவீட்டில் மீண்டும் பிரகாசிக்கச் செய்தான். மைந்தன் உயிர்பெற்று எழுந்ததைப்பார்த்த மாதாப் பிதாக்கள் வியப்பில் கலந்த வாஞ்சையுடன் யாசீனை வாரி அணைத்துக் கொண்டு, ஆனந்த கண்ணீர் வடித்தபடியே ஆச்சரியத்தோடும் அன்போடும் அந்த பிச்சைகாரர்களை இமைகொட்டாமல் பார்த்தார்கள். தன்னை நோக்குவதை பார்த்த இருபிச்சைகாரர்களி லொருவர் முதஸ்ஸிர் முஜம்மிலை பார்த்து சொன்னார்கள்:

சன்மார்க்கத்தின் சவுந்திரிய செல்வசீலர்களே! அல்லாவின் ஸிப்தாகிய நோன்புவைப்பவர்களுக்கு ஆண்டவன் அந்த அடியானுக்கு தன் தரிசனத்தையும் அருள் செய்து அவனை 'ஜன்னதுல் பிர்தவுஸ்' என்னும் மேன்மை பொருந்திய சுவர்க்கத்தில் சேர்ப்பான் என்பதைகேட்ட இச்சிறுவன் ஆண்டவனை தரிசிக்க வேண்டுமென்ற ஆர்வத்தால் பசி தாகம் இதுகளை பெருட்படுத்தாமல் இன்று நோன்பு வைத்து விட்டான். பசி தாகம் தாங்காமல் நோன்பை உடைக்காமல் தன்னுயிரையும் ஆண்டவனுக்காக தியாகம் செய்து விட்டான். இப்பாலகனுடைய உண்மையான பக்தியை மெச்சி இவனை எழுப்பிவிட்டு "நோன்பின் மகிமை"யை மேலும் கூறும்படி அல்லாஹு தஆலா நமக்கு கட்டளையிட்டு அனுப்பினான். திருக்குர்ஆன் துவக்கமான இம்மாதம் பெரிதும் பெருமையும்



புகழும்வாய்ந்தது என்பதில் சந்தேகமில்லை. இம்மாதம் நோன்பின் மகிமையால் மாண்டவன் மீண்டும் உயிர்பெற்றதை பார்த்த உங்களுக்கு நோன்பின் வரிசையைப்பற்றி அதிகமாக சொல்லவேண்டிய அவசியமில்லை. இந்நோன்பின் மகிமையால் தன் பாலகன் உயிர் பெற்றதை உலகமக்களுக்கு சொல்லி அவர்கள் மனதில் நோன்பின் பற்றுதல்படியும்படி பிரசங்கம் செய்யுங்கள். யாசீனுடைய இத்தியாகம் கியாமத் நாள்வரை அழியாமல் முஸ்லிம்களின் மனதில் பிரகாசித்துக் கொண்டிருக்கும். நம் இருவரில் ஒருவர் ஜிப்ரீல் என்ற மலாய்கும் மற்றவர் மீகாயில் என்ற மலாய்க்காக இருக்கும். நீங்கள் மங்களமுடன் மனங்குளிர்ந்து மண்ணுலகத்தில் நீடூழி வாழ வல்ல இறைவன் அருள் புரிவானாக" பிச்சைகாரவேஷத்தில் வந்த இருபுகழ் பெற்ற மலாயிகுகள் இதை சொல்லிவிட்டு மாயமாக மறைந்தார்கள்.

இப்போது கண்ணெதிரில் கண்ட காட்சி கனவா நினைவா என்று முடிவு செய்ய முடியாமல் முதஸ்ஸிரும் முஜம்மிலும் தவித்து கொண்டிருந்தார்கள். கண்ட காட்சியாவும் கடவுள் கிருபையால் உண்மையானதே என்று அவ்வீட்டில் கஸ்தூரி வாடையுடன் ஜன்னத்திலுள்ள ஹூருல்யீன்களின் 'மர்ஹபா' என்ற சப்தமும் சாட்சி சொன்னது.

ஸீரத்துல் பாறூக்.

இதாகிறது, நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலிபாவாகிய உமர்இப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சாமர்த்தியங்களும், தீனில் வழுவாது நடக்கும் நீதிகளும் அடங்கி யிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் நாமதைஇங்கு விரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. இது இரண்டு பாகமாகும். முதற் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும், இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி இருக்கின்றன. இரண்டு பாகமும் சேர்ந்தது. விலை ரூ. 3–0–0

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

## தாரீகுல் குலபா.

### இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்.

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும் இஸ்லாத்தை நிலைநாட்டிய தத்துவங்களும் இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும் இஸ்லாத்தின் சமத்துவங்களும் இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும், ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற்பாகம் நம் நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. இளேஸ் காகிதத்தில் கிரௌன் 16—பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1 8 0

ஷை இரண்டாவது பாகம்: இதில் ஹஜ்ரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்றும் பாகம்: இது ஹஜ்ரத் உஸ்மான் (றலி) அவர்களின கிலாபத்தும், ஹஜ்ரத் அலி (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜ்ரத் இமாம் ஹஸன் (றலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5—கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியுள்ளது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்று பாகம் சேர்ந்தது விலை ரூ. 3—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# பாஸோவின் மர்மம்.

(தொடர் கதை 5—வது பகுதி)

## அத்தியாயம் 13.

"இவர்கள் தான் ஜான்ஸனை பணஆசைக்காக கொன்றபின் ஓடியிருக்கிறார்கள். பின்பு தனனை யறியாமல் ஏதோ பயம் ஏற்படவே, திரும்பி நம்மிடம் வந்து ஒருகட்டுக்கதை அளக்கிறான்" என்றார் பவுட்ஸ். "ஆனால் தன்னை பிடித்து வைத்தவன் ஜான்ஸன் என்று சொல்வது நூதனமாக யிருக்கிறதே" என்று ஷம்ஸ் கேட்க, பவுட்ஸ் "இங்குவந்ததும் வாரண்ட் விஷயம் தெரியவே, அவனை நாம் பைத்தியக்காரனென்று நினைக்கும் வண்ணம் இக்கதையை ஜோடித்திருக்கிறான்" என்றார் பவுட்ஸ். "இங்கு இவன் சொல்வது பைத்தியக்காரன் உளருகிறான் என்று சொலகிறீர்கள். அன்று பாங்க்விஷயம் கவனித்தால், கதவுகளெல்லாம் திறக்கப்பட்டு பணம் ஒன்றும் எடுக்காமலிருந்தது பைத்தியக்காரத்தனம், ஆக இரு கேஸிலும் பைத்தியம் சமபந்தப்பட்டிருக்கிறது" என்றார் ஷம்ஸ்.

"நீங்கள் ஏன் பாங்க்கேஸை இததுடன் சேர்க்கிறீர்கள்? அதுவேறு இதுவேறு" என்று பவுட்ஸ் நிர்மானத்துடன் சொன்னார். "டவ்டன்பார்க்குக்கு உங்கள ஆட்களை அனுப்பினீர்களா? என்ன விஷயம் கிடைததது?" என்று ஷாமஸ் கேட்க, பவுட்ஸ் சார்ஜென்டைக் கூப்பிட்டு விசாரித்தார். "அங்கு ஒருவருமில்லை. இரவில் ஒருவன் ஒரு அறையில் படுத்து தூங்கியிருக்கக்கூடும். அவ்வளவுதான" என்றான் சார்ஜென்ட். "வேறொன்றுமில்லையா?" என்று பவுட்ஸ் கேட்க "இல்லை. ஆனால் அந்த வீட்டில் பேய் பிசாசு குடியிருப்பதாக கதைகள் கேளவிப்பட்டிருக்கிறேன். ஆதலால் அங்குயாரும் வசிப்பதில்லை" என்றான் சார்ஜென்ட். "நீயும் போலீஸிலிருந்து கொண்டு, பேய் பிசாசு கதைகளை நம்பிக்கொண்டு என்னிடம் சொல்கிறாயே!" என்று கோபத்துடன் சொல்லி விட்டு வெளியே வந்தார்.

"அந்த வீட்டுக்கு சொந்தக்காரர்யார்?" என்று ஷம்ஸ்கேட்க, "இப்பொழுது தான் யாரோ வாங்கியதாகவும் டவ்டன் குடும்பத்தவர்களுள் ஒருவரும் இல்லை யென்றும அவர்களெல்லாம இறந்து விட்டார்கள யென்றும் அதில் ஏதோ ஒரு ஆபீஸ்வரப்போவதாக கேள்விப்பட்டேன்" என்று பவுட்ஸ் சொனனார். "இன்னும காலியாகவிருக்கிறதே! ஏன் ஆபீஸ் ஒன்றும் வைக்கவில்லை?" என்று

ஷம்ஸ் கேட்க, "எனக்கு தெரியாது, இப்போது கேள்விபட்டோமே பேய் பிசாசு கதை, அதுதான் காரணமோ என்னமோ" என்று பவுட்ஸ் சொல்லி, சார்ஜெண்டைத் தருவித்து "அந்த டவ்டன் பார்க் யாருக்கு சொந்தம்? யார்வாங்கியிருக்கிறார்? ஏன் காலியாக வைத்திருக்கிறது? விசாரிக்கவும்" என்று சொல்லியனுப்பினார்.

"வீடுகாலியாக யிருக்கவே இராவெல்லாம் டாம் ஒளிந்து கொண்டிருந்திருப்பான்" என்று பவுட்ஸ் சொன்னார். "அப்படியானால் ஜேன் சமாச்சாரம் ஒன்றும் தெரியவில்லையே" என்று ஷம்ஸ் கேட்க, "அதுவும் கூடிய சீக்கிரம் தெரிந்து விடும். நமது போலீஸ்வலையை விட்டு எப்படி தப்பமுடியும்?" என்றார் பவுட்ஸ். "டாம் சொல்வதில் ஏன் கொஞ்சம் கவனம் செலுத்தாமலிருக்கிறீர்கள்? இரவு தனக்கு நடந்ததெல்லாம் ஒழுங்காக சொல்கின்றானே" என்று ஷம்ஸ் கேட்க, "நான் நினைக்கிறேன் அவன் பொய் புழுவுகிறான்" என்றார் பவுட்ஸ். "ஆனால் பாலோ என்பவனைப்பற்றியும் டாம் சொல்கிறானே, அதை யாவது கவனிக்க வேண்டாமோ" என்று கேட்க, "பாலோவா! பாலோ என்றொருவன்யிருப்பதாகவோ யிருந்ததாகவோ என்னால் நம்பமுடியவில்லை" என்றார் பவுட்ஸ்.

"இவன் மாத்திரம் சொல்லவில்லையே! மைக்பிரெட்ரிக்கும் சொன்னானே! பணம்கொடுத்ததாக இருவரும் சொல்கின்றார்களே!" என்றார் ஷம்ஸ்.

"பணம் ஒன்றுதான்பாலோ ஒருவனிருந்தான் என்று காட்டுகின்றதேதவிர வேறு அத்தாட்சி ஒன்றும் இல்லை. ஆனால் டாம்தன் கட்டுக்கதையில் சேர்த்திருக்கலாம்" என்றார் பவுட்ஸ்.

"அப்படியானால் மைக்சொல்வது?" என்று ஷம்ஸ் கேட்க.

"டாமே மைக்குக்கு 5பவுண்ட் நோட்டை கொடுத்து பாலோ விஷயமாக சொல்லுமாறு சொல்லி வைத்திருக்கவும் கூடும். பணமிருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாமே, என்ன ஷம்ஸ்! உங்களுக்கு தெரியாதா? இக்காலத்தில்பணத்திற்காக பொய் சாட்சி சொல்ல எத்தனை பேர்வருகிறார்கள்" என்று பவுட்ஸ் சொல்ல "அவ்வாறும் உண்டு" என்றார் ஷம்ஸ்.

"எவனோ வந்தானாம்! ஜான்ஸனைக் கொன்று மறைத்து விட்டானாம்! இந்தக் கதையை யார் நம்புவது?" என்றார் பவுட்ஸ்.

"கொன்றகத்தி அகப்பட்டதா?" என்று ஷம்ஸ்கேட்க "அகப்படவில்லை. ஏதாவது சமயலறையில் உபயோகிக்கும் கத்தியாகவுமிருக்கக்கூடும்" என்றார் பவுட்ஸ்.



இத்தருணத்தில் சார்ஜெண்ட் வந்து "அந்த டவ்டன் பார்க் விற்பனை முடியவில்லை. வாங்கியவர்கள் அட்வான்ஸ்தான் கொடுத்தார்கள். இதற்கிடையில் பேய் பிசாசு கதைக் கேட்டு வாங்காமல் யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்" என்றான்.

"அவர்கள் யார்?" என்று ஷம்ஸ் கேட்க, "வெஸ்ட்லெண்ட் பாங்க்" என்றான் சார்ஜெண்ட். "என்ன வெஸ்லெண்ட் பாங்கா?" என்றார் ஆச்சரியத்துடன் ஷம்ஸ். பவுட்ஸ் இதைக் கேட்டதும் "உங்கள் யோசனைக்கு ஒத்து வருகிறதென்று நினைக்கிறீர்களோ? நான் இப்பொழுதே சொல்லுகிறேன், உங்கள் முயற்சி வீணாகப் போகும். ஒரு சிறிய கேஸை பெரியதாகவும், மர்மங்களநேக மிருப்பதாகவும் நீங்கள் பிளான் போட்டுக் கொண்டே வருகிறீர்கள். டாம்—ஜேன் இவர்கள் செய்த கொலை கேஸ் இது. சாதாரணமாக நடக்கக்கூடிய சிறிய கேஸ்களுள் ஒன்று இது. பாங்க் சமாச்சாரம் வேறு" என்றார் பவுட்ஸ்.

"நீங்கள் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நான் போகும்வழி வேறு, நீங்கள் போகும்வழி வேறு ஆதலால் இன்றுமுதல் நான், எனக்குத் தெரிந்த வழியாக இக்கேஸை கவனிக்கிறேன். ஆனால் உங்கள் எண்ணத்திற்கு டாமை சிறைசெய்ததும் உங்கள் கேஸ் முடிந்தது. உங்கள் வேலையும் முடிந்தது. ஆனால் என் எண்ணப்படி இந்தக்கேஸ் இப்பொழுதுதான் துவக்கமாகிறது. ஆதலால் இனி நான் தனியே விசாரணை செய்து கொண்டு என் இஷ்டப்படி செய்யப் போகிறேன். போய் வருகிறேன்" என்று பவுட்ஸிடம் சொல்லிவிட்டு, ஷம்ஸ் போலீஸ் ஸ்டேஷனை விட்டு கிளம்பிவிட்டார்.

பவுட்ஸ் தனக்குள்ளேயே "ஷம்ஸின் வழி தவறுதல்தான்" என்று சொல்லிவிட்டு, வெஸ்ட் லெண்ட் பேங்கு டெலிபோன் செய்தார். மானேஜர் பர்க்லி வெளியில் போயிருப்பதாக பதில் வரவே மானேஜர் வந்தபின் டெலிபோன் செய்வதாக சொல்லி போனை வைத்தார்.

## அத்தியாயம் 14

ஒரு அகலமான தெருவில் ஒரு வீட்டின்முன் பர்க்லி நின்று கதவை தட்டினார். ஒரு பெண் கதவைத் திறந்தாள்.

"நீ மேரிதானே?" என்று கேட்டதற்கு "ஆம்" என்றாள்.

"நான் ஸ்டோன் விஷயமாக வந்துள்ளேன். உள்ளே வரலாமா?" என்று கேட்டார்.

"ஆட்சேபனையின்றி வாருங்கள். பாங்கிலிருந்து வந்தீர்களா?" என்று கேட்டாள்.

"நான் பாங்க் மானேஜர். ஸ்டோனை நான்தான் பாங்க் வேலையிலமர்த்தினேன்" என்றார்.

"உங்களைப் பற்றி என்னிடம் பலமுறை பேசியிருக்கிறான்" என்றாள்.

"கொஞ்ச நாட்களுக்குமுன், ஸ்டோன் தனக்கு ஏதாவது நேரிட்டால், அவனது வீட்டு சாமான்களையெல்லாம் எனது பொறுப்பில் வைத்துக் கொள்ளுமாறு சொன்னான். அவனுக்கு என்ன நடக்கப் போகிறதென்று நினைத்தேன். ஆனால் எதிர் பாராதது நடந்தது! பாவம்" என்றார் பர்க்லி.

"ஆம் பாவம் பரிதாபகரமான சாவு! அவன் எனக்கு குடிக்கூலி வகையில் 12 பவுன் பாக்கி. அதையும் நீங்கள்தான் கொடுப்பீர்களென்று நினைக்கிறேன்" என்றாள்.

குடக்கூலி பாக்கி என்றதும் திடுக்கிட்டார். சமாளித்துக் கொண்டு "உன் கணக்கை பார்த்துபின் சரி செய்கிறேன். அவனது அறையை பார்க்கலாமா?" என்று கேட்க, அவரை அழைத்துக் கொண்டு, 2-வது மாடியிலுள்ள ஸ்டோன் அறையைக் காண்பித்து, அங்கு பர்க்லியை விட்டு விட்டு, "தாங்கள் வேண்டியதை கவனித்துக் கொண்டிருங்கள். எனது தேவை பட்டால், இந்த பொத்தானை அமுக்குங்கள், எனது அறையில் மணியடிக்கும்" என்று சொன்னாள்.

"ஸ்டோன் தனது சாமான்கள் விஷயமாக எனக்கு எழுதி கொடுத்த பத்திரத்தை வேண்டுமானால் பாரும்" என்று சொல்லி, பர்க்லி தனதுஜேபியிலிருந்து ஒருகாகிதத்தையெடுத்தார் "வேண்டாம். நான்உங்களை பாங்கில் பார்த்திருக்கிறேன்" என்று சொல்லி கீழிறங்கி தனது அறைக்குச் சென்றாள்.

பர்க்லி அங்குள்ள சாமான்கள் ஒவ்வொன்றையும் பார்த்தார். மேஜையின் அறைகளை திறந்து பார்த்தார். ஏதோ தேடியது அகப்படாதது போல் அறையின் நடுவில் வந்து நின்றார். அந்த மேஜைக்கு இன்னொரு அறை சுவற்றோரமாக யிருப்பதை பார்த்து அதை திறந்து பார்த்தார். அதில் கையெழுத்து பேபர்கள் அதிகமிருந்தது. கடிதம் எழுதும் பேட் ஒன்றிருந்தது. அதை திறந்தார். மேலே ஒரு பிளாடிங் பேபர் இருந்தது. அதிலுள்ள கடிதங்களெல்லாம் எழுதாத புது கடிதங்களாக இருந்தன. அந்த பிளாடிங் பேப்பரை பார்க்க, சில எழுத்துக்களின் ஒட்டு, திரும்பியதாக யிருந்தது. அதை அங்கு தொங்கிக் கொண்டிருந்த கண்



ணாடியின்முன் போய் கண்ணாடி மூலம் பார்த்தார். அதில் 56B 796543 என்ற நம்பர் தெரிந்தது. "தப்பு ஒன்றுமில்லை. இந்த நம்பர்தான். நாம் செய்ததுதான் சரி" என்று தனக்குத்தானே யோசித்துக் கொண்டிருக்கும்போது, அந்த அறையின் கதவை திறக்கப்படுவது தெரிந்து திரும்பினார். ஒரு மனிதன் கதவை திறந்து "நல்ல ஒழுங்கான அறை" என்று சொல்லிக் கொண்டே உள் வந்தான். வந்தவன், பயப்படாமல் தன்னுடைய சொந்த அறைக்கு வருவதுபோல் சாதாரணமாக வந்ததை பார்த்து பர்க்லி பயந்து "நீ யார்?" என்றார்.

"என் பெயர் பாஸோ"

"பாஸோவா" என்று பர்க்லி சொல்லத் துடங்குவதற்குள் "சப்தம் போட்டு பேசாதே. இந்த மெத்தையில் வேறுயாரும் கிடையாது. எனக்கு சப்தமென்றாலே பிடிக்காது. சப்தம் கேட்டதும் என்னுடைய மூளை குளிர்விடுவது வழக்கம்" என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்த கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்தான். "எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!.....என்று பர்க்லி சொல்வதற்குள் "என்ன அவசரம் தெரியாமலா போய்விடும். முதலில் உனது நிலைமை மோசமானது. நீ இங்கு சுலபமாய் வந்தாய், திரும்பிப் போவது கஷ்டம்" என்றான் பாஸோ.

"என்ன உளறுகிறாய்!" என்று சொல்லிக் கொண்டே, கையிலிருந்த காகித பேடை கீழே போட்டுவிட்டு கதவைநோக்கி ஓடினார். அதற்குள் மின் வெட்டியது போல் பாஸோ, பர்க்லியின் காலை தட்டினான். தட்டினதும் கரணம் போடும் சமயத்தில் வலது கையால் ஒரு பலத்த குத்து நாடியில் விடவே தரையில் உருண்டு விழுந்தார் பர்க்லி. பின் சுவரைப் பிடித்துக் கொண்டு எழுந்து தரையிலேயே உட்கார்ந்து "அடே பேயே!" என்று கோபத்துடன் கதறினார்.

"நீ தான் ஒழுங்காக நடக்கவில்லை. நீ திரும்பி போவது கஷ்டமென்றுதான் சொன்னேனே, ஏன் என் பேச்சை நம்பக்கூடாது?" என்றான் பாஸோ.

"நீ என்னை அடித்ததற்காக கேஸ் போட்டு உன்னை என்ன செய்கிறேன் பார்?" என்று பல்லை கடித்துக் கொண்டு சொன்னார் பர்க்லி. "இங்கேயே இரும், நான் போய் இப்பொழுதே வக்கீலை கூப்பிட்டு வருகிறேன்" என்று வேடிக்கையாக சிறித்துக் கொண்டே சொல்லி, "இங்கு ஒரு நம்பரை தேடி பிடித்தாயா?" என்றான். "ஆம்" என்றார். ஒரு சிகரேட் எடுத்து மெதுவாக பற்றிக் கொண்டு "ஒரு பாங்க்கை திருடுவதைப்பற்றி நான் ஒரு கதை எழுதுகிறேனே தெரியுமா?" என்றான் பாஸோ. "எனக்கும்

ஸ்டோனுக்கும் நடந்ததெல்லாம் ஒரு சிநேகித பாண்மையாக நடந்ததே தவிர வேறொன்று மல்ல" என்றார் பர்க்லி. "நீயாக ஏதேதோ உளறுகிறாயே! ஸ்டோன் இறந்துவிட்டான். இனிமேல் நீ......" என்று பாஸோ சொல்வதற்குள், "என்னையா பயமுறுத்துகிறாய்?" என்றார் பர்க்லி. "நான் ஒன்றும் பயமுறுத்தவில்லை. உனக்கே தெரியும். ஸ்டோன் உன்னை ஏமாற்றி விட்டான்" என்றான் பாஸோ.

"ஏன் அவ்வளவு பொய் சொன்னானென்று விளங்கவில்லை. அவன் சொன்னதையெல்லாம் அப்பொழுது நம்பினேன்" என்றார் பர்க்லி. "புஸ்தக விஷயமாகவா? அவன் பொய் சொல்லவில்லையே! அவன் அநேக புஸ்தகங்கள் எழுதி இருக்கிறான். சில புஸ்தகங்கள் அந்த மேஜையில் கிடக்கின்றனவே" என்றான் பாஸோ. "என்னிடம் சில புஸ்தகங்களைக் காண்பித்தான். தனக்கு பாங்கில் வேலை கிடைத்தால், பாங்குகள் எவ்வாறு நடைபெறுகின்றன வென்பதை நன்றாயறிந்தபின் அவ் விஷயங்களைக் கொண்டு ஒரு கதை எழுதப் போவதாகவும் என்னிடம் சொன்னான். நான் அவனை நம்பினேன். ஆனால் தற்போது தனது சிநேகிதர்களை பாங்கை திருடுவதற்கு ஏற்பாடு செய்து, தான் பாங்கை திறந்து வைத்திருக்கிறான். திருடர்கள் வருவதற்குள் போலீஸ் வந்துவிடவே திருடு நடைபெறவில்லை" என்றார் பர்க்லி.

"நீ இப்பொழுது சொல்லியதை நம்பி உன்னை விட்டுவிட வேண்டுமா? உனக்கும் ஸ்டோனுக்கும் ஏதோ ரகசியம் உண்டு. இரவு பாங்க் திறக்கப்பட்டது தெரிந்ததும் நீ தகராறில் மாட்டிக் கொள்வாயென்று பயந்துவிட்டாயா?"

"இதுவரை ஜனங்களின் முன் மதிப்பாக இருந்து, திடீரென்று பெயர் கெட்டுப் போவது என்றால் யாருக்குத்தான் பிடிக்கும். அதுவுமல்லாமல் ஸ்டோன் அநேக கதை புஸ்தகங்களைக் கொண்டு அதிக பணம் சம்பாதித்திருந்தான். ஆதலால் அவனைப் பற்றி இதுவரையில் பயப்படவேயில்லை" என்றார்பர்க்லி. "ஸ்டோன் ஒரு பிசுனாரி, பணப் பேராசையுடையவன். கையில் நிறைய பண மிருந்தும், இதைப் போல் ஒருசிறிய அறையில் இருந்துக் கொண்டு பாங்கிலும் மியூஸியத்திலும் வேலை செய்து கொண்டு வந்தான். அவன் இதுவரையில் சேர்த்து வைத்த பெரிய தொகை எங்காவது ஒளித்து வைத்திருப்பான்" என்றான் பாஸோ.

"ஸ்டோனைப் பற்றி உனக்கு நன்றாக தெரிகிறதே!" என்று பர்க்லி கேட்க "அவனைப்பற்றி தெரிவது மல்லாமல், அவன் எவ்வாறு கொலை செய்யப் பட்டானென்றும் தெரியும். இப்பொழுது உன்னை வெளியிலனுப்ப முடியாதென்று சொன்னதின் காரணம் தெரிகிறதா?" என்றான் பாஸோ.



# அத்தியாயம் 15

துப்பறியும் ஷம்ஸ் ஹோட்டலில் தனது அறையில் கண்ணாடியின் முன்நின்று கழுத்தில் டை கட்டிக் கொண்டிருந்தார். அருகாமையில் ஒரு நாற்காலியின் மீது அவரின் அஸிஸ்டெண்ட் சோடே உட்கார்ந்து கொண்டு "நீங்கள் இரண்டு கேஸுக்கும் சம்பந்த முண்டென்றே நினைக்கிறீர்களா?" என்றான். "ஆம்! பேப்பரில் வெட்டியதை ஒழுங்காகவை" என்றார். "மேஜையின் பேரில் வைத்திருக்கிறேன்" என்று சொல்ல, ஷம்ஸ் மேஜையின் முன் உட்கார்ந்து படித்தார்.

"ஜான்ஸன் ஆஸ்ட்ரேலியாவைச் சேர்ந்தவன். சில வாரங்களுக்கு முன் இங்கு வந்துள்ளான். அவன் அநேக திருட்டு கேஸ்களில் கலந்திருந்தும், தண்டனையில்லாமல் இதுவரை தப்பித்துக் கொண்டான். பின்பு டவ்டன் என்பவன்பேரில், டவ்னனின் நிலம் தன்னுடையதென்று ஒரு கேஸ் போட்டிருந்தான். டவ்டனும் ஆஸ்ட்ரேலியாவில் அதிககாலம் யிருந்திருக்கிறான். பின்பு டவ்டன் ஏதோ ஒரு அபாயத்தில் அகால மரணமடைந்தான். அதற்குபின் ஜான்ஸன் தான்போட்ட கேஸை வாப்பஸ் வாங்கிக் கொண்டான்"

"இவ்வளவுதான் இதில் போடப்பட்டிருக்கிறது. ஏன் கேஸை வாபஸ் வாங்கிக் கொண்டான்?" என்று சோடேவைக் கேட்க, "அந்நிலத்தின் பேரில் கடன் அதிகமா யிருக்கலாம் கேஸ் போட்டால் தான் நஷ்ட மடையக்கூடுமென்று வாபஸ் வாங்கியிருக்கலாம்" என்று சிரித்துக்கொண்டே சோடே சொன்னான். பின்பு மணியைப்பார்க்க 5 மணியாகவே, "நான் ஸ்டோன் வேலை செய்து வந்த மியூஸியம் போகவேண்டும். நேரமாகிறது, மூடிவிடக்கூடும். நீ இந்த அட்ரஸுக்குப் போய் ஸ்டோனின் அறையை கவனித்து வா. உள்ளே விடாவிட்டால், ஏதாவது இன்ஷுரன்ஸ் கம்பெனி ஏஜென்ட் என்று பொய்யும் ஒரு கட்டுக்கதையும் சொல்லி, அவன் அறையை எப்படியாவது பார்த்துவா" என்று சொல்லி ஸ்டோனின் வீட்டு அட்ரஸைக் கொடுத்து, தான் மழைக்காக போடும் கோட்டை எடுத்து இடது கையின்மேல் வழமைபடி போட்டுக் கொண்டு கிளம்பினார் ஷம்ஸ்.

அவர் அந்த மியூஸியம் வந்து முன் கதவை திறந்து உள்சென்றார். ஒரு பெரிய ஹால் யிருந்தது. இரு பக்கம் அநேக கண்ணாடி ராக்குகளும் யிருந்தன. இரண்டுபேர்கள் பீரோக்கள் ராக்குகளுக்கு நடுவே அங்குமிங்கும் போய் கொண்டிருப்பதைப் பார்த்தார். இடது பக்கத்தில் ஆபீஸ் அறையிருந்தது. கதவை தட்டியபின் அவ்வறையினுள் சென்றார். அங்கு ஒருவன் கண்ணாடிப் போட்

...க்கொண்டு உட்கார்ந்திருந்தான். "நீங்கள் தான் இதற்கு மானேஜரா?" என்று கேட்க அவன் "ஆம்" என்றான்.

"எனக்கு ஸ்டோனைப்பற்றிய விஷயங்கள் தெரிய வேண்டும். உங்களுக்கு தெரிந்ததை சொல்லுங்கள்" என்று கேட்க "ஸ்டோன் பாவம்! அவன் சாதாரண வேலைக்காரனல்ல; மிக ஒழுங்கானவன்" என்று மானேஜர் சொன்னார்.

"சாதாரண வேலைக்காரனல்ல வென்றால் என்ன?" என்று ஷம்ஸ் கேட்க, "அவன் தான் கதை யெழுதுபவனென்று உங்களுக்கு தெரிந்திருக்குமே, அவன் அநேகமான கதைகளை இங்கிருந்து தான் எழுதினான். இங்கு காலையில் வேலை செய்வான். அதற்கு பகரமாக இங்கே யிருந்து மாலைவரை கதைகள் எழுதிக் கொண்டிருப்பான். வெளியில் ஒரு அறை குடக்கூலிக்கு எடுத்தாலும் பணம் செலவாகுமென்று இவ்வாறு செய்து வந்தான்" என்றான்.

"என்ன பெயரால் கதைகள் எழுதி வந்தான்?" என்று கேட்க "ஸிட்னி ஸ்டோன் என்னும் பெயரால்தான்" என்று சொன்னான்.

"அந்த பெயரால் வரும் புஸ்தகம் பிரபல்யமாக யிருக்கிறதே, அவன் பணமும் இவ்வகையிலேயே சம்பாதித்திருப்பானே! அப்படி யிருக்க, ஒரு ஆபீஸோ, அறையோ குடக்கூலிக்கு எடுக்காமல், இவ்வாறு ஏன் கஷ்டப்பட வேண்டும்?" என்று ஷம்ஸ் கேட்டார்.

அதற்கு அவன் "உலகம் பலவிதம்" என்றான்.

"அவனைத்தேடி, அவனிடம் பேச இங்கு யாரும் வருவது உண்டா?" என்று ஷம்ஸ் கேட்க, கொஞ்சநேரம் யோசித்தபின் "ஆம்! ஒரு முறை ஒரு வாலிபன் தனது பெண்ஜாதியுடன் வந்திருந்தான். அவர் பெயர் ஏதோ சொன்னான் எனக்கு ஞாபகமில்லை" என்று அவன் சொல்ல, "டாமா?" என்று ஷம்ஸ் கேட்டார்.

"அதைப்போல் தான் ஞாபகமிருக்கிறது" என்றான் மானேஜர்.

"என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்று தெரியுமா?" என்று கேட்க "தெரியாது" என்றான்.

அவன் இவ்வளவும் தெரிவித்ததற்கு வந்தனமளித்தபின் ஷம்ஸ் அந்த அறையை விட்டு வெளியே ஹாலுக்கு வந்தார். வந்ததும் திரும்பி இடது பக்கம் ஹாலைப்பார்க்க ஏதோ மினுமினுப்புடன் தன்னைநோக்கி வருவதை போல்பார்த்து உடனே தன் இடது கையைத் தூக்கினார். இடது கையில் தொங்கவிட்டிருந்த மழை கோட்டில் ஏதோ வேகமாக விழுந்ததுபோல் தெரிந்தது. கையை கீழே தொங்கவிட்டு என்னவென்று பார்க்க ஒரு சிறியகத்தி அந்த



கோட்டில் குத்தியிருந்ததைப் பார்த்தார். அந்த ஹாலில் இருபக்கங்களிலும் அடுக்கியிருந்த பீரோக்களினிடையே யிருந்து அந்த கத்தி எறியப்பட்டதுபோல் தோன்றியது. ஷம்ஸ் உடனே ஓடி பீரோக்களினிடையே பார்க்க யாரையும் காணவில்லை. அந்த ஹாலில் இருபக்கமும் பீரோக்களின் பின் வெளியிற்போக வழிகள் இரண்டிருந்தன. கொஞ்சநேரம் அந்த ஹாலைச் சுற்றிப்பார்த்த பின் "பீரோவின் மறைவில் நின்று எறிந்துவிட்டு ஓடியிருக்கிறான் போல் தெரிகிறது" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டே மியூஸியத்தை விட்டு வெளியில் வந்தார்.

## அத்தியாயம் 16

"நீங்கள் இன்ஷூரன்ஸ் விஷயமாக வந்தீர்களா? என்னிடம் ஸ்டோன் இவ்விஷயமாக ஒன்றும் சொல்லவில்லையே. அதுவுமல்லாமல் அவனுக்கு பந்துக்கள் யாரும் இருப்பதாக தெரியவில்லை. அப்படியிருக்க எவ்வாறு இன்ஷூர் செய்தான்" என்றாள் மேரி.

"என்ன நூதனமாக யிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே வீட்டினுள் புகுந்தான் சோடே. "போலீஸும் வந்து பார்த்திருப்பார்களே! அவன் சாமான்களையும் எடுத்துச் சென்றார்களா?" என்று சோடே கேட்க, "போலீஸ் வந்து பார்த்தார்கள். சாமான்கள் ஒன்றையும் எடுத்துப்போகவில்லை" என்றாள் மேரி.

"நான் அந்த அறையை பார்க்கலாமா?" என்று கேட்டதும் அவள் சந்தேகத்துடன் 'எதற்கு?' என்றாள்.

"இன்ஸூரன்ஸ் பாலிஸி எங்காவது அவன் அறையில் வைத்திருக்கக்கூடும்" என்றான்.

"சரி வந்துபாரும்" என்று சொல்லி சோடேயை மாடியிலுள்ள ஸ்டோனின் அறைக்கு அழைத்துச் சென்றாள். "அந்த மேஜையின் அறையில்தான் எல்லாப்பேப்பர்களும் உண்டு. தேடிப்பாரும்" என்று சொல்லி அங்கேயே நின்றாள். அவன் அந்த மேஜையின் அறையை பார்த்ததில் ஒன்றும் நூதனமானது காணப் படவில்லை. அவளும் பின்னாலேயே நிற்பதால் தன் இஷ்டப்படி எல்லாயிடத்திலும் தேடிப்பார்க்க வசதியில்லாததால், "பாலிஸி இங்கு காணோம்" என்றான் உடனே அவனை வெளியில் அழைத்து கதவைப்பூட்டினாள்; ஸ்டோன் இறந்த விஷயத்தைக் கேட்டு இங்கு குடிக்கூலிக்கு தங்கியுள்ள மற்றவர்களெல்லாம் பயந்திருப்பார்களே!" என்று சோடே கேட்டான்.

"தற்போது இன்னொருவன்தான் யிருந்துவருகிறான். அதிகம் பேர்கள் யிருந்து வந்தால் சிலர் பயந்து காலியாகிவிடுவார்கள்.

அதனால் என் வீட்டு மதிப்பு கெட்டுப்போகும். தற்போது ஒருவனிருப்பது நல்லதாயிற்று. சனிக்கிழமை காலை 4–5 பேர்கள் ஒரு நாள் தங்கி மறுநாள் போவது வழக்கம். அவர்கள் இதற்காக பயந்து வராமலிருக்கமாட்டார்கள்" என்றான்.

"அவர்களெல்லாம் வந்தால் உனக்கு சமையல்வேலை மிக அதிகமாகவும் கஷ்டமாகவு மிருக்குமல்லவா?" என்று கேட்க. "எனது சமையலைப்பற்றி எல்லோரும் புகழ்வார்கள். என்னுடைய சமையலறை மிகவும் பெரியது. இதைப்போல் பெரியது இந்த தெருவில் எந்த வீட்டிலும் கிடையாது. வந்து சமையலறையை பாருங்கள்" என்று பெருமையாக சொல்லி சோடேவை சமையலறைக்கு அழைத்துச்சென்றாள்.

சமையலறை பெரியதாகத்தானிருந்தது. அதற்கு பக்கத்தில் இன்னொரு அறையிருந்தது. அதிலென்ன மிருக்கின்றதென்று கேட்க, அதையும் திறந்து காட்டினாள். அதில் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து வரும் டின்னில் அடைக்கப்பட்ட இறைச்சி, பழவகை முதலியவைகள் நிறைத்துவைத்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, "இவ்வளவு சாமான்கள் இங்கு எப்படிக்கிடைத்தது?" என்று கேட்டான்.

"எனக்கு ஆஸ்ட்ரேலியாவில் அநேக சிநேகிதர்கள் உண்டு. அவர்கள் அடிக்கடி எனக்கு அனுப்புவார்கள்" என்றாள்.

"உன்னிடம் அருமையான வீடிருக்கிறது. சமையலும் நன்றாகயிக்குமாதலால் உன்வீட்டுக்கு அதிகமாகத்தான் வருவார்கள்" என்று சொன்னவுடன் "பாங்க் மானேஜர் பர்க்லீ இங்கு வந்தாரா?" என்றான். இந்தக்கேள்விக்கேட்டதும் அவள் திடுக்கிட்டாள். பின்பு சமாளித்துக்கொண்டு, "யார்? பாங்க் மானேஜர் பர்க்லீயா? அவர் என் வீட்டுப்பக்கமே வரவில்லை" என்றாள்.

"பர்க்லீக்கு இன்ஷூரன்ஸ் பாலிஸி விஷயமாக தெரியலாமென்றுகேட்டேன். பரவாயில்லை. நான்போய் வருகிறேன்" என்று சொல்லி அவ்வீட்டைவிட்டு வெளியே வந்தான். வெளியே வந்ததும் அந்த தெருவில் ஒரு கார் வந்து இவன்முன் நின்றது. உடனே சோடே அக்காரில் ஏறி "மியூஸியத்தில் என்ன நடந்தது?" என்றான். அந்தகாரை ஓட்டிவந்த ஷம்ஸ் கத்தியைக் காண்பித்து நடந்த விஷயத்தை சொன்னார்.

"கேஸ் மிகவும் சிக்கல் பின்னலாக ஆகிறது. இனி நீங்கள் இரும்புகவசம்தான் அணியவேண்டும்போல் தெரிகிறது" என்றான் சோடே வேடிக்கையாக. "சரி! உன் சமாசாரம் என்ன ஆயிற்று?" என்றார்.



"மேரி இதில் சம்பந்தப்பட்டிருக்கிறாள்போல் தெரிகிறது. பர்க்லீயைப்பற்றி பேசினதும் அவள் முகம் மாறுகிறது. அவளுடன் பேசியதில், பர்க்லீ அங்கு வந்துதான் இருப்பான். அவள் ஏதோ காரணத்தினால் அதை மறைக்கிறாள்" என்று முழுசமாச்சாரத்தையும் சொன்னான்.

"கூடச்கூலிக்கு இன்னொருவன் இருப்பதாக சொன்னாளே, அவன் யார்?" என்று கேட்க "அதைப்பற்றி விசாரிக்கவேயில்லை. அதைப்பற்றியும் கேட்டால் என்பேரில் சந்தேகம் கட்டாயம் ஏற்பட்டுவிடுமென்று கேட்கவில்லை" என்றான்.

"பாலோவே யிருக்கவும் கூடும்" என்று ஷம்ஸ் சொன்னார்.

"இப்போது எங்கே போகிறீர்கள்?" என்று கேட்க, "மில் வீட்டிற்கு போகிறோம். மைக்கிடம் சிலகேள்விகள் கேட்கவேண்டும். அவன் பதில சரியாக சொன்னால், நமதுகேஸ் முடிந்துவிடும்" என்று ஷம்ஸ் சொன்னார். கொஞ்சநேரத்தில் மில்வீட்டையடைந்தனர். வீட்டினுள் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. ஷம்ஸ் கதவை தட்டினார். திறக்கப்படவில்லை. கதவை காலால் உதைத்தார். இதற்கிடையில் சோடே வீட்டின் பின்புறம் வழியாக உள் குதித்து வந்து முன் கதவை திறந்தான். வீட்டினுள் வேறுயாருமில்லை. மேஜையின்பேரில் ஒருவிளக்குமாத்திரம் எறிந்துக்கொண்டிருந்தது. வீட்டினுள் சாமான்கள் முன் ஷம்ஸ் பார்த்தபடியே யிருந்தன. "இவ்வளவு நாட்களாக மைக் தனிமையாக இவ்விடத்திலிருந்ததை கவனித்தால் அவன் ஏதோ ஒரு சாமானை ஜாக்கிரதையாக காத்துக்கொண்டிருந்ததுபோல் தோன்றுகிறது. ஆனால் நான் முன்பு பார்த்ததில் ஒன்றும அகப்படவில்லை. ஏதாவது இரகசிய அறை யிருக்கலாம் இக்கட்டிடத்தைப் பார்த்தால் அப்படி இரகசிய அறை இங்கு இருக்கும் பக்ஷம் இந்த தரையின்கீழ்தான் யிருக்கவேண்டும்" என்றார் ஷம்ஸ்.

உடனே இருவரும் அத்தரையின்மேல் விரிக்கப்பட்டிருந்த கம்பளிகளெல்லாம் நீக்கி, இரகசிய அறைக்குபோக வேண்டிய வழியோ அல்லது ஷெ அறையின் வாயலைத் திறக்க விசையோ யிருக்கிறதா வென்று தேடினார்கள்; அகப்படவில்லை. "ஒரு இரகசிய அறையிருப்பின், அதற்கு வழியிங்கில்லாவிடில், வெளியில் ஆற்று பக்கமாகவுள்ள சுவற்றிலிருந்து வழி யிருக்கலாம்" என்று ஷம்ஸ் சொல்லி, ஆற்றுபக்கமுள்ள மரவாரண்டவுக்கு போனார்கள். அங்கியிருந்து தண்ணீரிலுள்ள மில் சக்கரத்தை பிடித்துக் கொண்டு மெதுவாக தண்ணீர் பக்கம் இறங்கினார் ஷம்ஸ்.

(தொடரும்)

# தெய்வீகக் காதல்.

(மாஸ்டர் கமல் பாபு)

(தொடர் கதை 4–வது பகுதி)

சினிமா ஜோடனை கவினுள்ள சீன் போன்ற ஒரு சோலை வனத்தில் ரஜாக் பாஷா உலாவிக் கொண்டிருந்தார். அவரிடம் பேசவேண்டுமென்று அநேகதடவை முயற்சி செய்தும் பலனற்று போகவே நான் வேண்டுமென்றே கால் தடுக்கி கீழே விழுவதுபோல் அவர் எதிரில் விழுந்து விட்டேன். நான் விழுந்ததை பார்த்ததும் அவர் பதறி போய் ஓடோடிவந்து என்னை தூக்கலானார். அவருடைய கன்னியமான கரங்கள் என்மீது பட்டதும், எனக்கு ஒரு விதமான இன்ப உணர்ச்சி மேலிட்டு வந்தது. அவர் கைகளின் உதவியால் நான் எழுந்து "தங்கள் உதவிக்கு........

"இதெல்லாம் ஒரு உதவியா? அதிருக்கட்டும் எங்கே போய் வந்தாய்?" அவர் என் வார்த்தை முடிவு பெறுவதற்குள் அன்புடன் கேட்டார்.

"நான் எந்த இடத்தை நாடிவந்தேனோ அதே இடத்தில் தான் இருக்கிறேன். நான் யாரை நாடி வந்தேனோ அவரும் என் எதிரில் தான் நிற்கிறார்" நான் தலை குனிந்தபடி சொன்னேன்.

"என்னை நாடிதான் வந்தாயா? என்ன விஷயம்? நீ யார்?"

"நேற்று தங்கள் வீட்டிற்கு வந்திருந்த ஹமீப் நான் தான். தங்களை பார்த்ததும் என் மனம் தங்கள் வசமாகிற்று. ஆகவே......

"வறுமையே இன்னதென்று அறியாத நீ சிறுமையே சிநேகிதனாக கொண்டுள்ள என்னிடத்தில் வாலிப உணர்ச்சியாலும் காதல் போதையாலும், கண் இருந்தும் கபோதிபோல் பேசாதே ஹமீப்.'

"இதுவரையில் கபோதியாக தானிருந்தேன். தங்கள், 'காதலியின் வேதனை' என்ற கதை என் கண்களை திறந்தது. கடவுள் சாட்க்ஷியாக சொல்கிறேன் நான் தங்கள் மீது கொண்டுள்ள காதல் தெய்வீகமானது."

"நீ என்மீது கொண்டுள்ள காதல் தெய்வீகமானது என்று உன் கண்களைமட்டும் திறந்தால் போதாது. உன் பெற்றோர்கள் கண்களும் திறந்து என் வறுமையை பாராமல் ஷரீயத் (மார்க்கம்) படி நமக்கு நிக்காஹ் (திருமணம்) ஆகவேண்டும். அதுதான் நேர்மையான வழி. ஆனால் உன் பெற்றோர்கள் கண் திறக்குமென்பது பகல் கனவுதான். எனவே நீ என்னை மறப்பதுதான் உத்தமம் ஹமீப், நான் வருகிறேன்." அவர் நடையை கட்டினார்.

"சர்தாஜ் (நாயகர்) கேளுங்கள் சர்தாஜ்" நான் கூப்பிட்டுக் கொண்டே அவர்பின்னால் ஓடினேன் ஓடின ஓட்டத்தில் உண்மையாகவே கல் தடுக்கி ஆ என்ற பெரும் கூச்சலுடன் கீழே விழுந்து விட்டேன்.

"மதனீ, மதனீ, ஏன் அலறினீர்கள், கனவு ஏதாவது கண்டீர்களா?" பக்கத்தில் படுத்திருந்த என் சிறிய அன்னி நூர்ஜஹான் கேட்டபோது தான் இதுவரையில் நான் கண்டது கனவு என்று தெரிந்தது. "கனவில்தான் என்காதலை நிராகரித்துவிட்டார். நினைவில் அங்கீகரிப்பாரா? ஒரு சமயம் நினைவிலும் நிராகரித்து விட்டால் என்கதி?" இதை நினைக்கும்போது என் கண்ணீர் என்முகத்தை நனைத்தது. அவர் மீது நான் அளவில்லாகாதல் வைத்திருப்பதாக அவருக்கு எப்படி தெரிவிப்பது என்ற பிரச்சனையும் மனதில் சஞ்சலத்தை உண்டு பண்ணியது. வெட்கத்தால் வெளியிடாமலிருந்து, நான் வேறொருவனுக்கு வாழ்க்கை பட்டால், அல்லது அவர் வேறொருவனிதாமணியை மணம் செய்துக் கொண்டால் என் வாழ்வு எப்படி போகுவது? எவ்வளவு நேரம் இந்த மாதிரி யோசித்துக்கொண்டிருந்தேன் என்பது எனக்கே தெரியாது. கடைசியாக நானே இர்ஷாத் பேகமை தருவித்து அவள் மூலமாகதான் பரிகாரம் தேடவேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன்.

அன்று விடிந்ததும் முதல் வேலையாக தங்கை ரவுனக்குன்னிஸாவை அனுப்பி இர்ஷாதை தருவித்தேன்.

"எதிர்பாராத விதமாய் இவ்வளவு அவசரமாக என்னை அழைக்க வேண்டிய அவசியம்?" இர்ஷாத் வந்ததும் கேட்டாள்.

"அவசியமில்லாமல் அழைப்பேனா?" என்று சொல்லியபடி அவளை என் அறைக்குள் அழைத்துச் சென்றேன்.

"வீட்டில் எல்லோரும் சவுக்கியம் தானே இர்ஷாத்?" அங்கு ஏதோ வேலையாக வந்த என் தாயார் கேட்டாள்.

"எல்லாம் உங்கள் ஆசீர்வாதம் தானம்மா" அவள் சுருக்காக பதில் அளித்தாள்.

என் தாயார் வெளியே சென்றதும் என் தங்கை ஜன்னதுன்னிஸா வந்து, "இர்ஷாத் ஆபா பேசக்கூடகஷ்டமா?" என்றாள் கிக்கிக்கும் பாவனையில்.

"உன்னிடம்பேசஎன்னடி இருக்கு, அவளுக்குநீ ஈடாஜோடா? அவன்தான் காதல் என்ற கரும்பு தோட்டத்தில் புகுந்து கணவனை



187020

தேடிக்கொண்டாள். அவள் காற்று உன் அக்காவுக்கும் அடித்தது போலிருக்கு தூக்கத்தில் காதலனோடு பேசுவதுமல்லாமல் அவன் பிரியும் சமயமோ என்னமோ துக்கம் தாங்காமல் அலறுகிறாள். இந்த வியாதி எல்லாம் நீயேன் வலிய வாங்குகிறாய்" அங்கு வந்த சிறிய அன்னி நூர்ஜஹான், ஜன்னதுன்னிஸாவுக்கு புத்தி சொல்லும் தோரணையில் குறும்புதனமாக குருககை புரிந்தாள்.

"இந்த குறும்புகாரஅன்னி இருப்பதாக தெரிந்திருந்தால் நான் வந்தே இருக்க மாட்டேன் ஜன்னத். நீயும் புத்தி இல்லாமல் அவள் இருக்கும்போது பேசக் கஷ்டமா என்று கேட்கிற......................"

"சரி ஆபா நான் மறுபடியும் வந்து பேசுகிறேன்" இர்ஷாத் வார்த்தை பூர்த்தி பெருவதற்குள் ஜன்னத் இதை சொல்லி விட்டு, "கன்னிபெண்கள் பேசும்போது கல்யாணமான உனக்கு என்னவேலை? வா, போகலாம்" யென்று அன்னி நூர்ஜஹானை இழுத்துக்கொண்டு ஜன்னத்துன்னிஸா வெளியேறினாள். அவர்கள் சென்றதும் நான் கதவைதாள்பாள் போட்டு விட்டேன் "ஏண்டி கதவை தாள்பாள்யிட்டாய்?" இர்ஷாத் கேட்டாள்.

"காரணமாகதான்போட்டேன். இர்ஷாத்! உன்னைபோல் அந்தரங்கதோழி எனக்கு யாருமில்லை. ஆகவே, காதலின் வேதனையை நீ அனுபவித்தது உண்மையானால், வேடிக்கை செய்யாமல் என் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" கொஞ்சும் மொழிகளில் கெஞ்சி கேட்டேன்.

"நீ எதற்காக தாபாள்போட்டாய் என்று இப்போதல்லவா புரிந்தது. சரி, உனக்கென்ன சந்தேகம்?"

"அவர்குணம் எப்படி என்று உனக்கு தெரியுமா?"

"அவர்குணத்தை அறியாமலா நான்அவரை காதலித்தேன்?"

"மனோன்மணிக்குமகள் இருக்கிறாளா என்றால் மும்மாணிக்கு வயதுமுப்பது என்கிறாயே, உன் காதலரை பற்றியாகேட்டேன்?"

"ஓ ராஜாக்பாக்ஷாவை பற்றிதான் பெயரில்லாமல் கேட்டாயா?"

"ஆம்"

"முதலில் என் சந்தேகத்தை நிவர்த்திசெய், மறுபடியும் நீகேட்டதற்கு பதில் சொல்கிறேன். உண்மையாக நீ ராஜாக்பாக்ஷாவை காதலிக்கிறாயா?"

"இல்லையென்றால் அவர் குணத்தைப்பற்றி நான் அறியவேண்டிய அவசிய மென்ன?"



"ஹபீப், அவர் ஏழை என்பதை அறிவாயா? உன்இஷ்டம் போல் அவருடன் மணம்செய்ய பணப்பேயுக்கு அடிமையாகிய உன் பெற்றோர்கள் சம்மதிக்க மாட்டார் என்பதை உணர்வாயா? உன்காதல் பாதையில் எத்தனை பணப்பாம்புகள் பாவி இருக்கிறது என்பதை நினைத்து பார்த்தாயா?"

"பணப்பாம்பின் பயத்தை காட்டி என்னை பாவியாக்காதே இர்ஷாத். அருந்தமுன்டச்சிக்கு அம்டச்சிதயவு ஏன்? காதலுக்காக உயிரையும் தியாகம் செய்ய துணிந்த எனக்கு உலகத்தில் அழிய கூடிய எந்த பொருளும் பயமளிக்காது. அப்படி பயமளித்தாலும் அதற்காக என் தூய்மையான காதலை தியாகம் செய்ய மாட்டேன். அதிலும், மகனுக்கு மாதாவின் காலடியில் சுவர்க்கம், மங்கைக்கு மணாளரின் காலடியில் சுவர்க்கம் என்பதை நன்றாக உணர்ந்தவள்நான். இக்காதலுக்காக, தாய்தந்தை பணம் பதவி, உற்றார் உனவினர், சகோதர, சகோதரீ, ஏன்? உலகத்தையும் துறக்கதுணிந்து விட்டேன். தயவு செய்து அவர் குணத்தை பற்றி சொல்லடி."

"உண்மையாக உன்னைப்போல் உறுதிகொண்டுள்ள பெண்கள் ஒவ்வொரு பணக்கார குடும்பத்தில் பிறந்திருந்தால் ஏழை பணக்காரன் என்ற பிரச்சனைக்கே இடமிருக்காது ஹபீப். இனி பணக்கார குடும்பத்தில் பிறக்கும் பெண்களும உன்னைபோல் அறிவுள்ளவளாகவும் ஏழைகள்மீது இரக்கம் கொள்பவளாகவு மிருக்க ஆண்டவன் அருள் புரிவானாக!

ஆமீன், சும்மா. ஆமீன்.

அவர் குணத்தை சொல்கிறேன் கேள். அவர் அன்[illegible] அமரர் ஏழ்மையில் இளவரசர், பொறுமையில் பொற்கடல், வறுமையில் வாடாமலர், சிறுமையிலும் சிற்றரசர், நாயனுடைய நம்பிக்கையில் நாயகர், கோபத்திலும் கருணையின் கற்கண்டு, அபசாரம் செய்தவர்களானாலும் உபசாரம் செய்வார், உண்மையை உரைப்பதில் ஊதாரிகளுக்கு பயந்து ஒருநாளும் ஓடமாட்டார், பெண்கள் உரிமையை அறிந்து அவர்கள் பெருமைக்காக பெரிதும் பாடுபடுவர், நெஞ்சை கொட்டும் வஞ்சகர்களாக இருந்தாலும் தஞ்சம் என்று வந்தால் மிஞ்சிபேசாமலும் வஞ்சகம் செய்யாமல் கொஞ்சி பேசுவார்......."

"போதும் இர்ஷாத் இதுவரையில் சொன்னதே போதும். ஆனால் நான் அவரைக் காதலிப்பது போல அவரும் என்னைக் காதலிப்பாரா? நான் அவர்மீது அளவில்லாத ஆசை வைத்திருப்பது அவருக்கு எப்படி அறிவிப்பது?"

“நீ அவர்மீது காதல் கொண்டிருப்பதுபோல், உன்னை பார்க்காத அவர் உன்னை காதலிப்பா ரென்பது கனுவுள்ள கட்டையை கையில் வைத்துக் கொண்டு கரும்பு என்று நினைப்பது போல்தான். நீயாகவே அவருக்கு அறிவிப்பதன்றி வேறு வழியில்லை.”

“பெண்களுக்கு தான் வழிமறைக்கும் வெட்கம் உடன் பிறந்ததாச்சே. நானே எப்படி அறிவிப்பது என்று தானே கேட்கிறேன். இதற்குமுன் எந்த பெண்ணாவது இப்படி அறிவித்திருக்கிறாளா?”

“சரிதான்போ. இந்த அசடு தனத்திற்குதானா உன்னைபோல் எல்லாப் பெண்களும் அறிவுள்ளவளாக இருக்க வேண்டுமென்று அல்லாவிடம் பிரார்த்தித்தேன்? காதலை வெளியிட ஆண்களுக்குத் தான் உரிமை, பெண்களுக்கு இல்லையா? இந்தமாதிரி சம்பவங்கள் நேருமென்று நினைத்தோ என்னவோ சுவர்க்க லோகத்தில் சர்வ அதிகாரம் செய்யக்கூடிய சீதேவி சிந்தாமணிகள், இக்காலத்து பெண்களுக்கு உதவி அளிக்கும் பொருட்டு தம் தம் காதலை தானே வெளியிட்டு யிருக்கிறார்கள்.”

“அந்தமாதிரி யார் வெளியிட் டிருக்கிறார்கள்?”

“இதுவரையில் சொன்னது புரியவில்லையா? கேள்! யூசுப் அலைஹிஸ்ஸலாம் அழகைக் கண்டு ஜுலைகா தன் காதலை வெளியிடவில்லையா? இபுறுஹிம் அலைஹிஸ்ஸலாமைக் கண்டு நம்ருதுடைய மகள் ஹாஜிரா தன் ஆசையை அறிவிக்க வில்லையா? தனக்கும் பதினைந்து வயது சிறுவராகிய இருலோக ரட்சகராகிய முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் நம் மாதா கதீஜா (ரலி) தன் எண்ணத்தை எடுத்துரைக்க வில்லையா? இவர்கள் எல்லாம் பெண்கள் இல்லையா? அல்லது இவர்களுக்கு வெட்கமில்லையா?”

“மாடிமேல் ஏறி பாரடி என்றால் மலைமேல் ஏறி பார்ப்பது போல், சீதேவி தனமுள்ள சீமாட்டிகளை எல்லாம் மூதேவி தனமுள்ள எனக்கு உதாரணம் காட்டுகிறாயே, தாய்மை உள்ளத்துடன் அழியா புகழ்பெற்ற அவர்கள் எங்கே, துற்நாற்றத்தைத் தவிர வேறே எதையும் அறியாதநாமெங்கே?”.

“சீதேவிகளை உதாரணம்காட்டினால்தானே மூதேவியும் சீதேவிகளாக மாறுவான்?”

“அது சரி. யார் மார்க்கமாக அறிவிப்பது?”



“யாரிடமாவது சொல்லியனுப்பினால் நீஒன்று சொல்லியனுப்ப, சொல்ல போனவர் ஒன்று அவரிடம் உளர, கன்னிபெண்ணை கல்யாணம் செய்ய போனவன் குரங்கை கட்டிக் கொண்டு வந்தமாதிரி ஆகிவிடும். அதனால் நீயே ஒரு கடிதம் எழுதி அனுப்பினால் உத்தமம்.”

“அக் கடிதத்தையும் யார் கொண்டுபோய் கொடுப்பார்?”

“அந்த கவலை உனக்கு வேண்டாம், கடிதம் எழுதி கொடு, என் தம்பி காஜா மார்க்கமாக அவரிடம் சேர்த்து விடுகிறேன்.”

“நீ என்மீது கொண்டுள்ள கருணைக்காக நான் என்னடி கைமாறு செய்வேன்?”

“என் அதுதான்நான் முன்னமே சொல்லி யிருக்கிறேனே, நான் பெறப்போகும் பிள்ளைக்கு நீ ஒரு பெண் பெற்று கொடுக்க வேண்டுமென்று மறந்து விட்டாயா?”

கடைசியில் இந்த வேடிக்கை செய்தாள் இர்ஷாத்.

கன்னி பெண்கள் இருவரும் காதல் பேச்சில் இறங்கினால் காலம் போகுவதே தெரியாது.

“நேரமாச்சு சாப்பிட்டுவந்து பேசுங்கள்.” அண்ணி நூர்ஜஹான் கதவு தட்டி சொன்னாள்.

நாங்கள் சாப்பிட்டு மீண்டும் அறைக்குள் வந்து கதவு தாள் பாள் யிட்டு விட்டோம்.

“எப்படியடி எழுதுவது? என்னடி எழுதுவது? காகிதமும் பென்னும் கையில் வைத்துக் கொண்டு இர்ஷாதை கேட்டேன்.

அதுகூட அரியாவள்போல் நடிக்காதடி. உன் இஷ்டப்படி எழுதிவிட்டு அசர் தொழுகைக்கு வரும்போது பதில் கொடுக்கும்படி குறிப்பிடு.

சரி எழுதுகிறேன். கடிதம் எழுதிவிட்டு சரியாக இருக்கா பாரடி. இர்ஷாதிடம் காண்பித்தேன்.

நான்பார்ப்பதை விட நீயே படித்து காண்பித்தால் தேவலை. இர்ஷாத் இப்படி சொன்னதால் கடிதம் படிக்கத் தொடங்கினேன்.

(தொடரும்)




# முட்டை வட்லப்பம்.

முட்டை 10, பெரிய தேங்காய் 1, வெள்ளை சர்க்கரை ஆழாக்கு 1.

ஒரு செம்பு அல்லது அலுமினிய பாத்திரத்தில், 10 முட்டைகளை ஊற்றி நன்றாக அடிக்கவும். தேங்காயைத் திருவி, தண்ணீர் படாமல் பால் எடுக்கவும். இதை ஷை முட்டையில் ஊற்றி, 1 ஆழாக்கு சர்க்கரை போட்டு நன்றாக கலக்கவும்.

இன்னொரு பெரிய செம்பு பாத்திரத்தில் சுமார் 1 இஞ்ச் உயரத்தில் கல் அல்லது வண்டு வைத்து அதன்மேல் ஷை முட்டையுள்ள பாத்திரத்தை வைக்கவும். பெரிய பாத்திரத்தினுள் தண்ணீர் ஊற்றவும். தண்ணீரின் உயரம், (உள்வைக்கப்பட்ட பாத்திரத்தினுள் இருக்கும்) முட்டை உயரத்துக்கு சரியாகயிருக்கவேண்டும். முட்டை பாத்திரத்தை ஒரு சிறு மூடியால் மூடி, பெரிய பாத்திரத்தையும் அதற்கு தகுந்த மூடியால் மூடி, அடுப்பிலேற்றி தீ எரிக்கவும். சுமார் ½ மணி நேரத்திற்கு பின் திறந்து பார்த்தால் முட்டை உறைந்து கெட்டியாகி விடும். கெட்டியாகாமல் யிருந்தால் இன்னும் கொஞ்சம் நேரம் அடுப்பில் வைக்கவும். கெட்டியானதும் இறக்கிகொள்ளவும். அருமையான முட்டை வட்லப்பம் தயாராகி விட்டது.

சென்ற மாதம் எழுதிய முட்டை கேக்கை சிலர் செய்து பார்த்து, கேக் மிகவும் கெட்டியாக வந்ததென்றும் மெதுவாக இல்லை என்றும் தெரிவித்தார்கள். முட்டை வெள்ளை கருவை அடிக்கும்போது நுரை வந்ததும் நிற்பாட்டி விட்டால் கேக் மெதுவாக இராது. நுரைவந்த பின்னும் அடிக்கவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு முட்டையை அடிக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு மெதுவாக யிருக்கும்.

மாவை போடும்போது தூவி மெதுவாக கிளரவேண்டும். மாவை போட்டு அதிகமாக கிளறினாலும், கேக் கெட்டியாகி விடும்.

# விகடத் துண்டுகள்.

குடியானவன் இன்ஷூர் செய்வதற்காக ஒரு டாக்டரால் பரிசோதிக்கப்படுகிறான்.

டாக்டர்: உங்களுக்கு எப்பொழுதாவது ஆக்ஸிடென்ட் ஆயிருக்கிறதா?

குடியானவன்: இல்லை.

டாக்டர்: உங்கள் ஆயுளிலே ஒரு முறைகூட உங்களுக்கு ஆக்ஸிடென்ட் ஆகவில்லையா?

குடியானவன்: இல்லை. ஆனால் ஒருமுறை மாடு என்னை தூக்கி எறிந்துவிட்டது.

டாக்டர்: நீங்கள் அதை ஆக்ஸிடென்ட் என்று சொல்லமாட்டீர்களா?

குடியானவன்: இல்லை, ஏனென்றால் அந்த மாடு வேணுமென்றே என்னை தூக்கி எறிந்தது.

---

டாக்டரிடம் ஒருவர் சென்று தன் முழங்காலை பரிசோதிக்கும்படி சொன்னார். டாக்டர் அவர்காலை பரிசோதித்துவிட்டு

"நீங்கள் எவ்வளவு நாட்களாக இப்படி காலைவைத்துக் கொண்டு நடந்துக்கொண்டு வருகிறீர்கள்"

"இரண்டு வாரமாக"

"இரண்டு வாரமாகவா? உங்கள் முழங்கால் ஒடிந்திருக்கின்றன. நீங்கள் இவ்வளவு காலமாக எப்படி இந்த காலை வைத்து நடந்தீர்கள் என்பதே ஒரு ஆச்சரியம். நீங்கள் ஏன் முன்னாலேயே என்னிடம் வந்திருக்கக்கூடாது?"

"என் உடம்புக்கு ஏதாகிலும் என்று சொன்ன உடனே, என் மனைவி நான் சிகரெட் குடிக்கிறதை நிறுத்தனும் என்கிறாள்"

---

ஒரு பட்டணத்து பையன் ஒரு குடியானவனிடம் வேலைக்கு அமர்ந்தான். முதல் நாள் காலையில் குடியானவன், தூங்கிக்கொண்டு இருந்த பட்டணத்து பையனிடம்

"எய் மணி 4½ ஆகிவிட்டது" என்றான்

பட்டணத்து பையன்: (தூக்கத்துடன்) மணி 4½ ஆகிவிட்டதா? காலைக்கு உங்களுக்கு நிறைய வேலை இருக்கு, இன்னும் தூங்க போகவில்லையா?

---

ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருப்பவர் "தண்ணீர், தண்ணீர் என்று இவ்வளவு சப்தம் போட்டு இன்னும் தண்ணீர் யாரும் கொண்டுவரவில்லையே" என்றார். இவர் போட்ட சத்தம் பொறுக்க முடியாத அவருக்கு அடுத்து உட்கார்ந்திருந்த ஒருவர், "உங்களை கொளுத்திவிட்டுடுங்க, தண்ணீர் கொண்டு வருவாங்க."

---


வெளி வந்து விட்டது! புதிய பதிப்பு!

# இரத்தின விலாசம் நவீத்துலாசம்.

அல்லாஹ், றஸூலைக் கொண்டு ஈமான் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் படித்தறிந்து அமல் செய்ய வேண்டிய அருமையான நூல் இது. பிரபல இஸ்லாமிய அரபு கிரந்தங்களாகிய கஜானத்துல் அஸ்றார், ஷிர்ஹத்துல் இஸ்லாம், ரத்துல் முக்தார், துர்ரத்துன் நாஸிஹின் முதலிய கிதாபுகளி லிருந்து திரட்டி யெடுத்தெழுதப்பட்ட அருமையான ஸீஹத்துகளும், மஸ்அலாக்களும், ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும் நிறைந்த நூல் இது. ஒவ்வொருவருடைய கையிலும் இருந்து தீரவேண்டிய கிதாபு. தமிழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத நூல். இதன் அருமை நேரில் பார்த்தால் தெரியவரும்.

சுத்தத் தமிழ் விலை ரூ 1-8-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.



Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.


187020


# மஜ்மூஉ முஃஜிஸாத்துர் றஸூல்

இந்த புஸ்தகமானது நமது நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அற்புதங்களாகிய 1011 முஃஜிஸாத்துகளை ஒருங்கு திரட்டி "மஜ்மூஉ முஃஜிஸாத்துர் றஸூல்" என்னும் நாமமிட்டு 3 வால்யூமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதர நபிமார்களுடைய அற்புதங்களைவிட நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய முஃஜிஸாத் தென்னும் அற்புதமானது மிகவும் அருமையானது. இதில் 1-வது வால்யூம் 395 முஃஜிஸாத்துகள் அடங்கியன.

கிளேஸ் கலிகோ பைண்டு விலை ரூ. 2-14-0

# ஹஜ்ரத் காஜா ஜுனைதுல் பக்தாதி

றழியல்லாஹு அன்ஹு அவர்களின்
ஜீவிய சரித்திரம்

அரும் பெரும் மெஞ்ஞானத் தத்துவங்களான தஸவ்வுப் தக்வா இபாதத்து, உபவாசம் என்ற இப்பாதையுடைய துறையில் துலங்கி விளங்கும் ஹஜ்றத் காஜா ஜுனைதுல் பக்தாதி றழியல்லாஹு அன்ஹு அவர்களின் அரிய ஜீவிய சரித்திரத்தைப் பார்க்க நம் நேயர்களில் அனைவரும் அளவிறந்த ஆவல் கொண்டிருக்கலாம் என்பதை சொல்லத் தேவையில்லை. ஹலரத் அவர்களின் மன்தாதாகிய ஹஜரத் சரீயிஸ்ஸிக்தி றழியல்லாஹு அன்ஹு அவர்களின் அரிய மெஞ்ஞான உபதேசங்களை ஏற்று நடந்தொழுகிய ஹஜ்ரத் காஜா ஜுனைத் அவர்கள் உலக மெஞ்ஞானிகளுக்கோர் வழி காட்டிய தீபத்தை போலாவார். தமது திவ்விய உபதேசங்களினால் அந்தகாரத்தை தவிர்த்து மெஞ்ஞான ஒளி வீச செய்திருக்கிறார். தஸவ்வுபின் அபேட்சகர்கள் இவ்வரிய நூலை வாங்கி வாசித்து அம்மஹானின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடத்தல் அவசியம்.

கிளேஸ் காகிதம் விலை ரூ. 1-4-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# மஜ்மூஉஸ் ஸலவாத்து.

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னாவைப் பொதிந்த துஆ கன்ஜுல் அர்ஷும், இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரில் எப்போதும் க்ஷேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும், மற்றும் ஸலவாத்துகளுக்கெல்லாம் தாயானதுமான உம்மு ஸலவாத்தும், இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கௌதுஸ்ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் கத்ரிய்யா ஸலவாத்தும், இன்னும் ஸெய்திநா குதுபுல் அக்தாபு வகௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ் மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் மதாரிய்யா ஸலவாத்தும், இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும் துஆக்களும் ஒருங்கே சேர்த்த அருமையான கிதாப். சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம் போல் கிலேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை அணா. 15 — அறபுத் தமிழ் விலை அணா. 15

# மஜ்மூஉ மௌலூது.

இதில் றஸூலுல்லாவுடைய மௌலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மௌலூதும், அதன் துஆக்களும் அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மௌலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யிதி, யாகுத்பா, யாஸெய்யிதிஷ்ஷைகி, மழை பைத்து, பிஹாப்பி ஸையிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் யெழுதி கிலேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா. 15

ஷெ மூன்று மௌலூதுகளும் அறபியில் கிலேஸ் காகிதம் கலிகோ பைண்டு — இதன் விலை ரூ. 1-12-0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.